பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 2 ஞாயிற்றுக்கிழமை (19-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 254

## களுத்துறையில் மீண்டும் கைதிகள் போராட்டம்!

### 15 பேர் சிறைக் கூரை மீது

கொழும்பு, செப். 19

''விசாரணை செய் அல்லது விடுதலை செய்'' என்ற கோரிக்கையை முன்வைத்து 15 தமிழ கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலையின் கூரை மீது ஏறி இருந்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணை மற்றும் வழக்குத் தாக்கல் எதுவுமின்றி களுத்துறைச் சிறைச்சாலையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் தமது கோரிக்கை நிறைவேறும் வரை தொடர்ந்து போரா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் புதைகுழி தோண்டும் பணி நாளை!

### செம்மணியில நேற்றுத் தோண்டிய இடங்களில் எதுவுமில்லை

யாழ்ப்பாணம், செப். 19

செம்மணி வெளிப் பகுதியில் புதைகுழிகள் உள்ளதாகக் காட்டபபட்ட 19 இடங்களிலும் தோண்டும் பணிகள் நேற்றுடன் முடிவடைந்ததை அடுத்து நாளை திங்கட்கிழமை காலை அரியாலைப் பகுதிகளில் அடையாளம் காட்டப்பட்ட புதைகுழிகளைத் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவுப் படுகொலை வழக்கின் மரண தண்டனைக் குற்றவாளிகளான முன்னாள் படைச் சிப்பாய்கள் ஐவரும் செம்மணி வெளியில் 19 இடங்களிலும் கொழும்புத் துறை அரியா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறை எல்லைக் கிராமங்களில் 50 க்கு மேற்பட்டோர் உயிரிழப்பு!



அப்ப இந்தியாவில தேர்தல் சூடு பிடிக்குது போல....!

## ஆயுத பாணிகள் தாக்குதல்

அம்பாறை, செப்ரெம்பர் 19

அம்பாறை மாவட்டம் உகண பொலீஸ் பிரிவில் உள்ள எல்லைக் கிராமங்கள் மீது நேற்று அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதல்களில் 50 க்கு மேற்பட்டோர் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டனர்.

எல்லையில் புஞ்சிகிரிய என்ற இடத்தில் உள்ள மூன்று சிங்களக் கிராமங்களே தாக்குதலுக்கு உள்ளாகின.

அதிகாலை இரண்டு மணி முதல் நான்கு மணிவரை இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 29 பொலீஸார் உட்பட 40 பேர் இந்தியாவில் பலி!

### தேர்தலில் வன்முறை

புதுடில்லி, செப். 19

இந்திய நாடாளுமன்ற தேர்தல்களுக்கான மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு நேற்று ஐந்து இந்திய மாநிலங்களில் நடைபெற்றது. வாக்களிப்பின்போது இடம்பெற்ற வன்செயல்களில் 29 பொலீஸார் உட்பட 40 பேர் உயிரிழந்தனர்.

பிஹார் மாநிலத்தின் மூன்று மாவட்டங்களில் தீவிரவாதிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதல்களில் வாக்குப் பதிவுசெய்யும் அதிகாரிகள் உட்பட 29 பேர் கொல்லப்பட்டனர்.

ஜம்மு—கஷ்மீரில் இடம்பெற்ற குழப்பத்தில் 7 பேர் கொல்லப்பட்டனர் என்றும்—

[12 ஆம் பக்கம் பார்க்க]

## மரணச் சடங்கு அரச செலவில்; நஷ்டஈடு வழங்கவும் பணிப்பு!

### ஜனாதிபதி ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கிறார்

கொழும்பு, செப். 19

அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்கள் மீது இனந்தெரியாதவர்கள் நேற்று அதிகாலை நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 50 க்கு மேற்பட்டோரின் மரணச் சடங்குகளும் அரச செலவில் நடத்தப்படஉள்ளன.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த இது தொடர்பான உத்தரவுகளைசம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேற்று வழங்கினார்.

நேற்றைய தாக்குதலினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் உடனடியாக 10 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படும் என புனர்வாழ்வு, புனரமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் உறுதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் அரச அதிபர் தொடர்ந்து காவலில்!

### அவரை விடுவிக்கக் கோரிக்கை

கொழும்பு, செப். 19

மன்னார் அரசாங்க அதிபர் எம். குரூஸ் கொழும்பில் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழுவும் மற்றும் 14 தொண்டர் நிறுவனங்களும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

மன்னார் அரச அதிபரை விடுவிக்குமாறு கோரும் கடிதத்தினை மேற்படி அமைப்புகள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளன.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் அமைச்சர் ஜி. எல். பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்க

(11 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறைப் பகுதிக்கு ஒரு நீதி புதுக்குடியிருப்புக்கு வேறு நீதியா?

### ஜோசப் எம். பி. ஜனாதிபதியிடம் கேள்வி

கொழும்பு, செப். 19

அம்பாறை எல்லைக் கிராமங்களில் நடைபெற்ற கொலைகளுக்கு அனுதாபம் தெரிவித்த தாங்கள் புதுக்குடியிருப்பு கிராமத்தில் விமானப் படையினரின் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவில்லை தங்களுடைய இதய சுத்தியற்ற அணுகு முறையையே இது பிரதிபலிக்கின்றது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்தெரிவித்துள்ளார்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அம்பாறை எல்லைக் கிராமங்களில் நடைபெற்ற கொலைகளை எவர் செய்திருந்தாலும் அது கண்டிக்கத்தக்க செயல் ஆகும்.

இதனைச் செய்தவர்களைக் கண்டித்ததுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபமும் தெரிவித்த தாங்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்கள் நடத்தப்பட்ட இடத்துக்கு ரத்வத்த விஜயம்

### புலிகள் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 19

அம்பாறை எல்லைக் கிராமங்கள் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று விஜயம் செய்தார்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இராணுவ உயரதிகாரிகளுடன் அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுடனும் நேரில் உரையாடினார்.

[12 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய மின் உபகரணங்கள், மரத் தளபாடங்கள், குசினிச் சாமான்கள், மோட்டார் போன்றன விற்பனைக்குண்டு. தொடர்புக்கு 115/1 அரசடி வீதி, கந்தர்மடம். (69169)

புதிய 2092 Sony T.V. (யப்பான்) ஒன்றும் விலை 35000/-, பாவித்த Orion டெக், Yamaha (Mate 50) மோட்டார் சைக்கிள் ஒன்றும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 64, 2ஆம் குறுக்கு வீதி, நல்லூர். (69105)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி புறோயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: அண்ணா, புகையிரத வீதி, இணுவில். (69153)

முன்பு இலுப்பையடிச் சந்தியில் இருந்த எமது இறைச்சிக் கோழி விற்பனை தற்போது 37/2, கச்சேரி நல்லூர் வீதி, (Blue Ribbon Hotel அருகில்) யாழ்ப்பாணம் என்ற முகவரியில் புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. வாடிக்கையாளருக்கு விசேட விலைக் கழிவு உண்டு. (69170)

இறைச்சிக் கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. சில்லறையாகவும் மொத்தமாகவும் மலிவு விலையில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.416, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (69154)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் [பாதிக் கோழி உட்பட] சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் குறைந்த விலை. நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை அத்துடன் அடைமுட்டையும் வாழைக்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] முத்திரைச் சந்தையடி, நல்லூர். [69063]

புறொயிலர் இறைச்சிக் கோழி குறைந்த விலையில் [அரைக் கோழி உட்பட] விற்பனைக்கு உண்டு. இல. 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம் அல்லது 217/A, ஆஸ்பத்திரி வீதி, [முலவைச் சந்தி, வேளாங்கண்ணிக் கடைக் கருகில்], யாழ்ப்பாணம். [69098]

இறைச்சிக்கோழி புறோயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். 1 kg 120/-தொடர்பு: கண்ணா வீடியோ சென்ரர் வளவு, இல. 31, மான் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (69110)

இறைச்சிக்கோழி (Broiler), கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து தினமும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (69106)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக் கடை அருகில்). (69043)

## வீதி துப்புரவு

அரியாலை ஆனந்தன் வடலிவீதி துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

கடந்தஇரண்டு நாள்களாக இராணுவம், பொலீஸாரினால் வீதியில் உள்ளமிதி வெடிகள் மற்றும் பற்றைகள் யாவும் துப்புரவு செய்யப் பட்டுள்ளது. (ஐ-ரி-86)

## திருத்திக் கொடுக்கப்படும்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல் புகைப்படத்துறை துணைச் சாதனங்களு திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) கன்னாதிட்டிச்சந்திக்கு அருகில். (69010)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தினரால் ஆங்கிலம் ஆண்டு 6 முதல் A/L வகுப்பு வரை வீட்டிற்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். அத்துடன் பாடசாலை செல்லாதவர்களுக்கும் சுலபமான முறையில் கற்பித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:- சரவணா அச்சகம், 233, ஆஸ்பத்திரிவீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். (69048)

## புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 40 மட்டுமே! மல்லிகாபதி, மானிப்பாய். தொலைபேசி இல-2887. (69159)

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை நெடுங்குளம் தண்டவாளத்துக்கு அருகாமையில் இருக்கும் 21 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு சி. தங்கராசா இல: 55, எழிலூர், துண்டி, எழிலூர். (69167)

## தையல் பயிற்சி

நவீன மரபு முறைகளில் உடைகள் வெட்டி தைப்பதற்குரிய குறுகிய காலப் பயிற்சி திங்கள், செவ்வாய், வியாழன் வகுப்புகள் 109/2, சட்டநாதர் வீதி, நல்லூர். (69163)

## CHEMISTRY

99 A/L பரீட்சை எடுத்தவர்களுக்கானது 2 மாதத்தில் துரித மீட்டல், அலகு ரீதியான வினா விடையும் பயிற்சி வினாக்களும் பிரிவு I. வார நாள்களிலும் பிரிவு II வார இறுதி நாள்களிலும் தொடர்பு: திரு. அன்பு, 26, கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம் [ஆயர் இல்லம் அருகில்] [69175]

## உடன் விற்பனைக்கு

1 நாள் புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும். நா. ஸ்ரீகாந்தன், 103, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். T. P. நம்பர் 3270. (69157)

## மணமகள் தேவை

இந்து கெளரவ குடும்பம் விவசாயத்தில் கலாநிதிப்பட்டம் பெற்று தகுதி வாய்ந்த உத்தியோகம் வகிக்கும் 37 வயதுடையவருக்கு படித்த அழகான 30 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. சாதகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும். தொ. இல. 2736. (69086)

யாழ். இந்து கெளரவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் A/L சித்தி அடைந்து வெளிநாட்டில் வேலை செய்யும் 37 வயது நிரம்பிய தமது மகனுக்கு கல்வியும் அழகும் உள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர். விளம்பர இல. 948, C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (69129)

கனடாவில் வசிக்கும் 27 வயது நிரம்பிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. அடுத்த மாதம் யாழ். வரவிருக்கின்றார். தொடர்புகளுக்கு: அம்பாள் திருமணசேவை, ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (69184)

## சோதிடம்

சாதகம் கணிக்க, விரிவான பலன் அறிய, சாதகம் எழுத, விவாக தாமதத்திற்கு காரணம் இதற்கு முறையான சாந்தி பரிகாரம். கிரக தோச பரிகாரம், யந்திரம், வெளிநாட்டு பிரயாணத்திற்கு பாதுகாப்பு பொக்கட் யந்திரம், வியாபார ஸ்தலங்கள், வீடுகளுக்கு வசியந்திரம் ஆகியவைகளிற்கு நாடுங்கள்: விஸ்வப்பிரம்ம ஸ்ரீ, மா. தங்கவேல் சோதிடர், No. 9, டச்சு வீதி, சாவகச்சேரி. [69080]

## பயிற்சி வகுப்பு

Fabric Printing பயிற்சி உங்களின் இடத்திலேயே தனியாகவோ குழுவாகவோ வழங்கப்படும். தொடர்பு: ஆசிரியர், 109/2, சட்டநாதர் வீதி, நல்லூர். (69162)

## கலர் மீன்கள் விற்பனை

கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A. அருளானந்தம் (குட்டி), 17, இராஜேஸ்வரி வீதி, நாயன் மார்கட்டு, யாழ்ப்பாணம். (மதியம் 12 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும்.) [69182]

## வீடு வாடகைக்கு

யாழ் நகரில் சகல வசதிகளுடனும் 3½ பரப்புக் காணியில் 8 அறைகள் கொண்ட வீடு 33, பலாலி வீதி, (Red Cross) அண்மையில் உடன் வாடகைக்கு உண்டு. திருமதி துரைரத்தினம், 67/1, குருசோ வீதி, சுண்டுக்குளி, (69179)

---

## ஸ்தபதி து. சின்னராசா அவர்களின் மறைவை முன்னிட்ட
## அனுதாபமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தோடு கடந்த முப்பது ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டவரும் கோயில் சிற்பக் கலைகளில் வல்லுநருமாகிய து. சின்னராசா [பெருமாள் கோயிலடி] அவர்களின் மறைவை முன்னிட்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும் வேளை அன்னாரின் பாரியார், பிள்ளைகள், குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை சமர்ப்பிக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

[சி/8988]

---

## வள்ளுவர் அக்கடமி
### உரும்பிராய்

விஞ்ஞானம்; இரா. செல்வவடிவேல்

ஆரம்பம்: 22 - 09 - 99 புதன் மாலை 4.00 மணி (S.L.T)

ஏனைய பாடங்கள்: எமது வழமையான ஆசிரியர் குழு

O/L வினா விடை வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகும்.

(69155) நிர்வாகி

---

## மங்களபதி வைத்தியசாலை

உடற்பருமன், குழந்தைப் பேற்றின் பின்பும் மாதவிலக்கு நின்ற பின்பும் ஏற்படும் உடற் பருமன், இரத்த அழுத்தம், கை, கால் விறைப்பு, உடற் சோர்வு, வயிற்றுப் பொருமல், மூட்டுவலி, அதிகரித்த இரத்தப் போக்கு ஒழுங்கற்ற வலியுடன் கூடிய மாத விடாய் மாத விலக்கு நிற்கும் கால கோளாறு கட்கும் சிகிச்சை பெறலாம்.

நேரம்: சனி, ஞாயிறு 9.00--12.00 3.00 -6.00 மணி
கிழமை நாள்களில் மாலை 4.00 -- 6.00 மணி

41/5, அரச விதி,
(பண்டாரக்குளம், பிள்ளையார் கோயிலடி.)
நல்லூர்.

T. P. 2718

(6915g)

---


# நிள்மா
சொட்டு நீலம்



ஒளிமயமான வெண்மைக்கு நவீன தாய்மாரின் புதிய தெரிவு.

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

**S. V. M**
No. 154, HOSPITAL ROAD,
JAFFNA.
T. P. No:- 021 - 2202
021 - 2991
021 - 2911

**CITY AGENCY**
No. 158, STANLEY ROAD,
JAFFNA.
T. P. No:- 021 - 2055
021 - 2100

அன்புக்கு அம்மா வெண்மைக்கு நிள்மா

(சி/8983)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடப்பெயர்வால் ஏற்பட்ட இழப்புக்கு நஷ்டஈடு கோரும் வர்த்தகர்கள்

## ஒருநாள் கடையடைப்புச் செய்ய முடிவு

யாழ்ப்பாணம், செப். 19

கடந்த 1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வையடுத்து யாழ். மாவட்ட வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட கட்டட, தளபாட பொருள்கள் இழப்புக்களை ஈடுசெய்யும் விதத்தில் நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். இது குறித்து விரைவில் காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் யாழ் மாவட்ட சகல வர்த்தக நிலையங்களையும் ஒருநாள் மூடி கடையடைப்புச் செய்யப்படும்.

இவ்வாறு கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அந்நிர்வாக சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய விடயங்கள் வருமாறு:-

குறிப்பிட்ட நட்ட ஈடு தொடர்பாக அறுநூறுக்கும் மேற்பட்டவர்கள் எமது சம்மேளனம் ஊடாக கடந்த வருடமும் இவ் வருடமும் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபைத் தலைவருக்கும் யாழ். அரச அதிபர் மற்றும் புனர்வாழ்வுக் கிளைக்கும் அனுப்பி உள்ளனர்.

இவ் விண்ணப்பங்கள் கிடைத்ததாகவும் குறைந்த வட்டியில் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கடந்த வருடம் வடக்கில் மீள்குடியேற்ற அதிகார சபையின் உதவிப் பொதுமுகாமையாளரால் அறிவிக்கப்பட்டது. எனினும் உருப்படியான நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

### உதயன் தாக்குதலுக்கு கண்டனம்

பத்திரிகா தர்மத்துடன் பலதரப்பட்ட உண்மைச் செய்திகளைத் துணிச்சலுடன் வெளியிடும் ஒரே ஒரு பத்திரிகையான ''உதயன்'' பத்திரிகை அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கின்றது. பலவிதமான நெருக்கடிகளின் மத்தியில் யாழ்குடா நாட்டில் உண்மையை விளம்பிக் கொண்டிருக்கும் ஒரேயொரு செய்தி இதழான உதயன் பத்திரிகைக்கு வாய்ப்பூட்டுப் போடலாமென நினைப்பது பகற்கனவு. இத்தகைய தாக்குதலினால் அதன் மிடுக்கோ துணிச்சலோ குறைந்து விடக்கூடாது என சகல வர்த்தகர் சங்கங்களின் சார்பில் நாம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

(ஐ-ரி)

## வீதி திருத்த ஏற்பாடு

சுன்னாகம், செப். 19

அண்மையில் மிதிவெடிகள் அகற்றப்பட்ட சுன்னாகம் பழைய பொலீஸ் நிலைய வீதி வலி. தெற்குப் பிரதேச சபையால் திருத்தம் செய்யப்படவுள்ளதாக மேற்படி சபையின் தலைவர் தி. மா. செல்வராசா தெரிவித்தார்.

வீதியை ஊடறுத்துச் செல்லும் மண் அணையை அகற்றி, வீதியை அமைக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் தார் போட்டுத் திருத்தம் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

[ஐ-27]

## சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், செப். 19

நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 1.30 மணி வரை திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

லயன் டாக்டர் க. பிரதீப் குமார் தலைமையில் யாழ். மருத்துவபீட மாணவர்கள் இரத்த அழுத்தம், சலரோகம், புற்றுநோய் மற்றும் ஏனைய நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பார்கள்.

(இ-4)


## முன்பள்ளி ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்

இடம்: யாழ். மத்திய கல்லூரி மண்டபம்

காலம்: 20-09-99 திங்கட்கிழமை

காலை 10.00 மணி

யுனிசெவ் ஸ்தாபன பிரதிநிதிகளும்
சுவிடிஸ் ஸ்தானிகர் திரு S. STINE அவர்களும்
வடக்கு — கிழக்கு மாகாண கல்வியமைச்சின்
செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களும்
இக் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது பங்குபற்றும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ரி. வி. கிருஸ்ணசாமி
பிராந்திய உள்ளூராட்சி,
உதவி ஆணையாளர்.

பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(சி/9002)



கொக்குவில்

## இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

மேற்படி எமது பழைய மாணவர் சங்கத்தின்
விசேட பொதுக் கூட்டமானது
25 - 09 - 1999 சனிக்கிழமை
காலை 10.00 மணிக்கு ( S. L. T. )
கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில்
நடைபெறவுள்ளது.

நோக்கம்:-
- கனிஷ்ட பழைய மாணவர் சங்கம் ஒன்றினை தோற்றுவிக்குமுகமாக தயாரிக்கப்பட்ட யாப்பிற்கு பொதுச் சபையின் அங்கீகாரம் பெறல்
- இதற்கேற்ப தாய்ச்சங்கத்தின் யாப்பில் தேவையான திருத்தங்கள் செய்தல்.

எமது அனைத்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும் இக் கூட்டத்திற்கு சமுகம் தருமாறு அழைக்கின்றோம்.

செயலாளர். கொ.இ.க.பழைய மாணவர் சங்கம்

(69194)


## பழைய மாணவர் தொடர்பகம்

யாழ். பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள் நன்மை கருதி பழைய மாணவர் தொடர்பகம்' என்ற பிரிவு துணைவேந்தரின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 25 வருடங்களாக இந்தப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவர்கள், பட்டங்கள் பெற்றவர்களில் பழைய மாணவர் தமது தரவுப் படிவத்தினை இந்தப் பிரிவில் சமர்ப்பிக்குமாறும் —

அதன் மூலம் பழைய மாணவர்கள் பல நன்மைகளைப் பெற முடியும் என்றும் —

துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக நிர்வாகத்துடன் பழைய மாணவர் தமது இணைப்பை வலுப்படுத்த இந்தப் பிரிவில் உடன் தமது பெயர், விலாசம், கல்வி கற்ற காலம் ஆகியவற்றைப்பதியுமாறும் துணை வேந்தர் கேட்டுள்ளார்.

(ஐ-3)

## குப்பைக்குள் குண்டு

கூட்டி ஒதுக்கிய குப்பையை கொளுத்தியவேளை, அதற்குள்ளிருந்த வெடிப்பொருள் ஒன்று திடீரென வெடித்ததில், நகரசபைத் தொழிலாளி ஒருவர் காலில் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை நாலாம் குறுக்குத்தெருவில் இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரசபையின் தொழிலாளியான தும்பளையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ரவீந்திரன் வயது 39) என்பவரே இடது காலில் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-109)

## குடிநோய் மருத்துவம்

'அகவொளி' குடும்ப வளத் துணை நிலையத்தின் ஏற்பாட்டில் 'திருப்பம்' என்னும் குடிநோய் மருத்துவம் (குடிநோய்க்கு அடிமையாகி விடுதலை பெற விரும்புவோருக்கான மருத்துவமும் ஆற்றுப்படுத்தலும்) மாதத்தின் முதலாம், 3 ஆம் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரை இடம்பெறும் என மேற்படி நிலைய இயக்குநர் அறிவித்துள்ளார்.

(ஐ-க)

# விளையாட்டு நிகழ்வுகள்

ஆனைக்கோட்டை, செப். 19

ஆனைக்கோட்டை அ. மி. த. க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பாடசாலை அதிபர் திரு. சி. நாகையா தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு சண்டிலிபாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கம் பிரதம விருந்தினராகவும் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. மாதவகுமார், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஓய்வு பெற்ற அதிபரும் சமாதான நீதிவானுமான ந. சிவபாதம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

★ ★ ★

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தின் 29 ஆவது ஆண்டுநிறைவைஒட்டி கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தினர் நடத்தும் ''அமரர் வேலுப்பிள்ளை சபாரத்தினம்'' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி வரைநடைபெற உள்ள நொக் அவுட் முறையிலான இந்த ஆட்டங்கள் ''அ'', ''ஆ'' என இரு பிரிவுகளில் நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். பல்கலைக்கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி யாழ். பல்கலைக்கழக அவை ஏற்பாடு செய்திருந்த பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில், நேற்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் யாழ். மாவட்ட ரீதியிலான மெய்வன்மைப் போட்டி ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் சுந்தரம் டிவகலாலா பிரதம விருந்தினராகவும் வி. ரி. சிவலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்கள்.

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் பாடும்மீன் ''பி'' விளையாட்டுக்கழகம்.

★ மாலை 5 மணி சென்றொக்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மிசன் மைக்கல்ஸ் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

கைதடி சுகவாழ்வு நிலையக்குழு அணிக்கும் நாவாந்துறை சுகவாழ்வு நிலையக் குழு அணிக்கும் இடையிலான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி இன்று நாவாந்துறையில் நடைபெறும்.

(இ-ரி)

### அம்பாறைப்...

(முதலாம்பக்கத் தொடர்)

ரூபாவை நஷ்டஈடாக வழங்க ஏற்பாடு செய்துள்ளீர்கள் அத்துடன் அவர்களின் மரணச் சடங்குகளை நடத்துவதற்கான பணத்தையும் அரசே செலவு செய்யும் என அறிவித்துள்ளீர்கள்.

இதேபோன்று கடந்த புதன் கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கிராமத்தில் தங்கள் கட்டுப்பாட்டுக்குக் கீழே உள்ள விமானப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 22 அப்பாவித் தமிழர்களுக்கு எந்தவித அனுதாபமோ அல்லது இவற்றை மேற்கொண்டவர்களுக்கு எதிராக எதுவித கண்டனமோ நீங்கள் தெரிவிக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக 10 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கவும் நீங்கள் இதுவரை முன்வரவில்லை.

தங்களின் இந்தச் செயலானது தமிழ் மக்கள் தங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையும்—

இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தங்கள்மூலம் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையையும் தவிடுபொடியாக்கி விட்டது.

தாங்களும் இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தின் முன்னைய அரசியல் தலைவர்களுக்குச் சளைத்தவர் அல்லர் என்பதை இதன் மூலம் நிரூபித்துள்ளீர்கள் என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ-5]

### மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளான த. சித்தார்த்தன், எஸ். அடைக்கலநாதன் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு வருடங்களாக மன்னார் அரச அதிபராக மிகச் சிறந்த முறையில் எம். குரூஸ் கடமையாற்றி வருகிறார் என்று மேற்படி கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(இ-5)


உ
சிவமயம்

## நூல் வெளியீட்டு விழா

### ''திருநெறிய பண்ணிசைப் பாடல்கள்''

திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி
அவர்களின்
[முன்னாள் ஆசிரியர், மகாஜனக் கல்லூரி]
90 ஆவது ஆண்டு பிறந்த நாளையும்
65 ஆவது ஆண்டு திருமண நாளையும்
முன்னிட்டு

''திருநெறிய பண்ணிசைப் பாடல்கள்'' நூல் வெளியீட்டு விழா நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் புரட்டாதித் திங்கள் 3 ஆம் நாள் [20-09-99] திங்கட்கிழமை உத்தராட நட்சத்திரம் கூடிய சுபவேளையில் காலை 9-00 மணியளவில் காசிவிநாயகர் தேவஸ்தானத்தில் பூசை வழிபாட்டுடன் ஊர்வலமாக வந்து எமது இல்லத்தில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

அவ்வேளையில் விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''யாமா வளவு''
காசிப்பிள்ளையார் கோயிலடி,
தெல்லிப்பழை.

(69197)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாலர் பாடசாலை ஆசிரியைகள் கலந்துரையாடல்

நெல்லியடி, செப். 19

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாலர்பாடசாலை ஆசிரியைகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சுவீடிஸ் தூதரகஸ்தானிகர் சிட்னி வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற உள்ளனர்.

[இ-30-109]

### களுத்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

டப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

''விசாரணை செய் அல்லது விடுதலை செய்'' என்ற கோரிக்கையை முன்வைத்து மூன்று கைதிகள் மேற்படி போராட்டத்தைக் கடந்த செவ்வாயன்று ஆரம்பித்தனர்.

நேற்று மேலும் 12 கைதிகள் இந்தப் போராட்டத்தில் சேர்ந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளின் நிலைபற்றி அறியும் பொருட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் நேற்று களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தார் (இ-5)


**சிவா திரையில்**

சிவன் கோயிலடி, யாழ்.

10-30, 2-30 மணிக்கு

அருண்பாண்டியன், மாலாஸ்ரீ நடிக்கும்

லேடி டைகர்

(புதிய வெளியீடு)

(சி/9009)



நாளை ஆரம்பம்!

**DAY CLASS**

**(பகல்நேர வகுப்பு)**

**A/L 2000**

காலை 8 மணி (ப. நே.)

**D. M. I.**

யாழ் நகர்.

– D. SAM

(சி/8922)


## இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 19

கொக்குவில் மற்றும் கொழும்புத்துறைப் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர்களின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்பாட் )லேன், பொற்பதி வீதி கொக்குவிலைச் சேர்ந்த கனகசபாபதி ஜெகன் [வயது 16] என்பவரை விசாரணைக்காக கடந்த 15 ஆம் திகதி ஊரெழு இராணுவ முகாமுக்கு வருமாறு இராணுவம் அழைத்ததாகவும்அதைத் தொடர்ந்து அவரது தாயார் அவரையும் அழைத்துக் கொண்டு முகாமுக்குச்சென்ற போது முகாமில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டதாகவும்—

உப்புக்குளம் றோட். கொழும்புத்துறையைச் சேர்ந்த கனகலிங்கம் சுதன் [வயது 22] என்பவர் வீட்டிலிருந்து புறப்பட்டு முள்ளிக்குச் சென்றுகொண்டிருக்கும் போது கடந்த 17 ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரது கைது தொடர்பாகவும் இராணுவத்தினரால் உறவினர்களிடம் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-9)

### அரியாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

லைப் பகுதிகளில் 6 இடங்களிலும் புதைகுழிகள் இருப்பதாக அடையாளம் காட்டியிருந்தனர்.

செம்மணி வெளியில் அவர்கள் அடையாளம் காட்டிய 19 இடங்களிலும் தோண்டும் பணிகள் நேற்று முன்தினம் முடிவடைந்தன.

எனினும் செம்மணியின் பாரிய புதைகுழிகள் இருப்பதாக முன்னாள் சிப்பாய்கள் அடையாளம் காட்டிய இடங்களுக்கு அருகே ஏதாவது புதைகுழிகள் இருக்கலாம் என்ற நோக்கில் அப்பகுதிகளில் தோண்டும் பணிகள் நேற்று இடம்பெற்றன.

பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்து செம்மணி உப்பளப் பகுதியில் சுமார் 20பேரின் சடலங்கள் போடப்பட்டு மூடப்பட்டதாக சோமரத்ன ராஜபக்ஷ அடையாளம் காட்டிய இடத்துக்கு அருகே உள்ள பகுதியில் 10 அடி அகலமும் 15 அடி நீளமும் கொண்ட குழி ஒன்று 7 அடி ஆழத்துக்கு நேற்றுத் தோண்டிப்பார்க்கப்பட்டது.

கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலின் அருகில் டி. எம். ஜெயதிலக அடையாளம் காட்டிய புதைகுழியின் அருகேயும் —

காணாமற்போனவர்களின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகள் சமர்ப்பித்த மனுவை அடுத்து செம்மணி— கண்டி வீதி, நல்லூர் நாயன்மார்கட்டு வீதிச் சந்தியில் செம்மணிச் சோதனை நிலையத்துக்குப் பின்புறமாக இருந்த புதைகுழியின் அருகே உள்ள தூர்ந்துபோன கேணிப் பகுதியிலும் — நேற்று மேலும் தோண்டும் பணிகள் இடம் பெற்றன.

எனினும்நேற்றைய தோண்டும் பணிகளின் போது[illegible]லும் புகளோ எச்சங்களோ மீட்கப்படவில்லை என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

நாளை திங்கட்கிழமை அரியாலையில் உள்ள ஜெயா கட்டடப் பகுதியில் சோமரத்ன ராஜபக்ஷ மற்றும் ஏ. எஸ். பெரேரா ஆகியோர் 4 அல்லது 5பேர் புதைக்கப்பட்டதாக அடையாளம் காட்டிய இரு இடங்களிலும் —

முள்ளிச் சந்திக்கு அருகில் உள்ள கிணறு ஒன்றினுள் சடலங்கள் போட்டு மூடப்பட்டதாக அடையாளம் காட்டப்பட்ட இடத்திலும் — புதைகுழிகளைத் தோண்டும் பணிகள் ஆரம்பமாகும்.

(இ-6-3-9)

### மரணச்...

(முதலாம் பக்கத் தொடர்)

அளித்துள்ளார்.

இதேவேளை —

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயன்றுவரும் இந்த வேளையில் இப் படுகொலை இடம் பெற்றுள்ளது என்றும்—

நாகரிகம் உடைய எந்தச் சமூகமும் இந்தப் படுகொலைகளைக் கண்டனம் செய்வர் என்றும்--அவர்தனதுகண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சகல உதவிகளும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

(இ-5)

### 29 பொலீஸார்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆந்திர மாநிலத்தில் நக்ஸலைட்டுக்களின் தாக்குதலில் காங்கிரஸ் கட்சித் தொண்டர் ஒருவர் உயிரிழந்ததாகவும் — பொலீஸார் தெரிவித்தனர்.

ஆந்திர மாநில வாக்களிப்பு நிலையம் ஒன்றின் மீது நக்ஸலைட்டுக்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 3 பொதுமக்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-9-ரி)

## அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்)

நூற்றுக்கு குறைந்த எண்ணிக்கையான ஆயுத பாணிகள் திடீரெனக் கிராமங்களுக்குள் பிரவேசித்து கண்டபடி சுட்டதுடன் வீடுகளுக்குள் புகுந்து உறக்கத்தில் இருந்த பலரை சுட்டும், வெட்டியும் கொன்றுள்ளனர். சுமார் 130 குடும்பங்கள் அத்தக் கிராமங்களில் வசித்து வந்தன,

அதிகாலை பொழுது விடியும் வேளை பொலீஸாரும், படையினரும் அங்கு விரைந்து சென்றபோது ஆயுத பாணிகள் தப்பிச் சென்றிருந்தனர். காயமடைந்த நிலையில் காணப்பட்ட பலர் உடனடியாக அம்பாறை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இறந்தவர்களில் 23 பேர் ஆண்கள் 17 பேர் பெண்கள் எட்டுப்பேர் சிறுவர்கள்.

கொல்லப்பட்டோரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 16 பேர் அடங்குகின்றனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. அதேவேளை பலியானவர்களில் இரண்டு ஆசிரியர்களும் மூன்று அரச ஊழியர்களும் அடங்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் இப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட கிராமவாசி ஒருவரின் இறப்புக்குப் பிந்திய தானம் வழங்கும் வைபவத்துக்காக குருநாகலில் இருந்து நேற்று முன்தினம் அக் கிராமத்துக்கு வந்திருந்த 15பேரும் தாக்குதலில் பலியாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் புஞ்சிகிரிய கிராமத்தின் மீதும் பின்னர் மகாஓயா பொக்குறுவிரம என்ற கிராமத்தின் மீதும் தொடர்ந்து புல்லுமலை பதிரிக்க என்ற கிராமம் மீதும் இனம் தெரியாத ஆயுதபாணிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

பொக்குறுவிரம கிராமத்தில் அமைந்திருந்த ஊர்காவற்படையினரின் காவலரண் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் ஓர் ஊர்காவலர் காணாமல் போயுள்ளார். மூன்று ஊர்காவலர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். 3 பொலீஸார் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர்.

இந்தக் கிராமங்கள்மீதான தாக்குதல்களின் போது பீதியாலும் காயமடைந்த நிலையிலும் தப்பிக் காடுகளுக்குள் ஓடிய 37 பேர் காணாமற் போயுள்ளனர் இவர்கள் காடுகளுக்குள் வைத்துக் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது எனினும் அவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

காடுகளுக்குள் தப்பிச் சென்றோரை தேடும் பணியில் அம்பாறைப் பொலீஸாரும் படையினரும் நேற்று பகல் ஈடுபட்டிருந்தனர்.

[ஐ-21-14[

## தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்)

தாக்குதல்கள் இடம்பெற்ற எல்லைக் கிராமங்களில் உடனடியாகப் புதிய படைமுகாம்களை அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துமாறு படை அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

புதுக்குடியிருப்பில் பொதுமக்கள் மீது இடம்பெற்ற தாக்குதல்களுக்கு பழிவாங்கும் வகையில் இந்தத் தாக்குதல்களை விடுதலைப்புலிகளே நடத்தினர் என்றும் அமைச்சர் ரத்வத்த குற்றம்சாட்டினார்.

இதேவேளை —

தாக்குதலில் உயிரிழந்தவர்களின் இறுதிச்சடங்குகள் இன்று நண்பகல் 12 பணிபாவில் கோணகல பொதுமயானத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதிச்சடங்குகளில் சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட பல அரசியல் தலைவர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ-6-5)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 06 – 07 – 1920

மறைவு: 20 – 08 – 1999

**திருமதி இராசலட்சுமி துரைசாமி**

(கொட்டடி)

எமக்கு நிழல் கொடுத்த தாயே!
தங்கள் நினைவில் வாடுகிறோம்
எமது துயர்துடைத்துப் பாசம் காட்டி
அன்புடன் அமுதூட்டி வளர்த்த தாயே!
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு
விண்ணுலகம் சென்றீரோ!
மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்
தங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

11, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(69173)



உ
சிவமயம்

# புதுக்கடைத் திறப்புவிழாவும் இடமாற்றமும்

கடந்த சில காலமாக (புதிய இல. 352) நாவலர் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனத்தை வாடிக்கையாளரின் நன்மை கருதி 20-09-1999 அன்று

## த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

52, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் எனும் புதிய இடத்தில் ஆரம்பிக்க உள்ளோம். வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்:
உரிமையாளர்
த. குமாரசாமி

52, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9005)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-09 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை ஐயாத்துரை

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி 2 ஆம் ஒழுங்கை கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஐயாத்துரை 17 - 09 - 99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பூபதியின் அன்புக் கணவரும் கந்தையா சுந்தரம் அவர்களின் மருமகனும் பரிமளாதேவி (மாலா), நகுலேஸ்வரன் (ஈசன் ஸ்ரோர்ஸ் கொழும்பு), மாலினி (சுவிஸ்), ராகினி (டென்மார்க்), லம்போதரன், ரஜனி, உபாகரன், உதயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகலட்சுமி, மகேஸ்வரி, கமலேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பராசக்தி, சோமசுந்தரம், துரைராஜா, கனகராஜா ஆகியோரின் சகோதரரும் இரத்தினசபாபதியின் மைத்துனரும் கவ்யா, அஞ்சலி (டென்மார்க்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-9-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பூபதி
(மனைவி)

பொற்பதி, 2 ஆம் ஒழுங்கை,
கொக்குவில்.

(69199)

## திருமதி கௌசாம்பிகை அம்பிகாபதி

நாரந்தனை கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது வரக்காப்பொலவில் வசித்தவருமாகிய திருமதி கௌசாம்பிகை அம்பிகாபதி அவர்கள் 17-09-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிகாபதி உடையாரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்தியநாதர் தம்பதிகளின் அருமை மகளும் தவமணி, நந்தகோபால், ருக்மணிதேவி, காலஞ்சென்ற சண்முகதாஸ், காலஞ்சென்ற நடேசானந்தன், பரஞ்சோதி ஆகியோரின் பாசமிகுதாயாரும் பரமலிங்கம், பரமேஸ்வரி, சண்முகசேகரம்பிள்ளை, இசைவாணி, நல்லநாயகி, சகுந்தலராணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று [19-09-99] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பே. பரமலிங்கம்
[மருமகன்]

(சி/9003)

## இளையகுட்டி சுப்பிரமணியம்

(பாலப்பா - மணியம்)

பெரியாவுடையைப் பிறப்பிடமாகவும் வட்டு கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட இளையகுட்டி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று 18 - 9 - 99 சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் காலமானார்.

அன்னார் இராசாத்தியின் அன்புக் கணவரும் சரஸ்வதிதேவி (சுவிஸ்), றோசணாதேவி, இராஜேஸ்வரி, சிவபாலதேவன் (பெரிசு), மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானசந்திரன் (சுவிஸ்), மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-9-99) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. இராசாத்தி
(மனைவி)

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

(சி/9006)

## கா. க. கனகசுந்தரம்

(ஓய்வுபெற்ற அதிபர் — புங்குடுதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வதிவிடமாகவும் தற்பொழுது பிரான்சில் வசித்தவருமாகிய கார்த்திகேசர் கந்தையாபிள்ளை கனகசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர், புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம்) அவர்கள் 17 - 9 - 99 வெள்ளிக்கிழமை பிரான்சில் காலமானார் என்பதனை மன வேதனையுடன் அறியத் தருகின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. சிவானந்தர் (பெறாமகன்)
நா. பாலசுந்தரம் குடும்பத்தினர்
பேராசிரியர் கா. குகபாலன்
(மைத்துனர்)

சிவசிதம்பரம் சிவானந்தர்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
இல 198/10, திருவள்ளுவர் சாலை,
அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[69198]

## கலந்துரையாடல்

கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஜீ.ரி.ஸற் நிறுவனத்தின் வீட்டுத் திட்டக் குழுத்தலைவர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிறுவன உத்தியோகத்தர்களுடனான இக்கலந்துரையாடலில் குழுத் தலைவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

## சேவை நலம் பாராட்டு விழா

திருநெல்வேலி, செப். 19

சமூக சேவகி திருமதி நவநீதம் ஜெகதீசனின் சேவை நலம் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். சமூக அபிவிருத்தி மன்ற இணைப்பதிகாரி திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

(இ-135)


2000 DAY CLASS

CHEMISTRY
அலகு ரீதியான மீட்டலும் வினாவிடையும்
ஆரம்பம்:- 21/9 செவ். 9-00 a.m.
Mr. அன்பு
Phy. - Mr. ஸ்பெல்மன்
Maths- Mr. தவசேகர்
SHAMROCK
(சி/9004)



விக்னா கல்வி நிறுவனம்
A/L Day Class
கலை - வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்: 20-09-99
காலை 9-00 மணி
(69176)



லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
விஜய் - சிம்ரான் நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
காட்சிகள் / 10-30, 2-30
(69025)



நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜுன் - ரம்பா - மீனா வடிவேலு நடித்த
செங்கோட்டை
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
(69189)



ராஜா
யாழ்ப்பாணம்
சில தினங்களுக்கு
மம்முட்டி - தேவயானி மற்றும் பலர் நடித்த
மறுமலர்ச்சி
10-30, 2-00, 5-00
(சி/8968)


# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு தெய்வானைப்பிள்ளை

வேலணை துறையூரைப் பிறப்பிடமாகவும், புசல்லாவையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற ஐயம்பிள்ளை கார்த்திகேசு (முன்னாள் அதிபர், ஐயனார் வித்தியாலயம் வேலணை) அவர்களின் அன்புப் பாரியார் தெய்வானைப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை ஐயனார் வித்தியாலயம்) 16-09-99 அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (17-9-99) வெள்ளிக்கிழமை அன்று புசல்லாவை இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கே. துரைராசா
(மருமகன்)
(துரை அன்கோ யாழ்ப்பாணம்)

232, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(69185)

## அழகரத்தினம் தனராஜ்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த அழகரத்தினம் கனகேஸ்வரியின் அன்புப் புதல்வன் தனராஜ் 17-9-99 இல் ஜேர்மனியில் அகாலமரணமானார்.

அன்னார் லெனின்ராஜ், சத்தியராஜ், மீனலோஜினி, நித்தியலோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பொ. அழகரத்தினம்
(தந்தை)

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
4 ஆவது மைல்.

(69196)

## கணபதிப்பிள்ளை சிவாகரன்

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை (குஞ்சையா) அவர்களின் அன்பு மகன் சிவாகரன் நேற்று 18-09-99 அன்று அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சந்திரமௌளீஸ்வரியின் மூன்றாவது அன்பு மகனும் கவிதாகரன், சசிகரன், சுபேதா, உமாகரன், பிரியங்கா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை
(குஞ்சையா) தகப்பன்.

விலாசம்:
கல்வயல், சாவகச்சேரி.

(சி/9009)

## சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை (கொமிஷனர்)

தெல்லிப்பழை கிழக்கு நல்லனார் கிணற்றடியைச் சேர்ந்த சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை (விலை மதிப்பாளரும் ஏல விற்பனையாளரும் நீதிமன்ற கொமிஷனரும்) லண்டனில் 16—09—99 அன்று காலமானார்.

இவர் செல்லமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திரு. கந்தையா, திருமதி பொன்னு சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தம்பியும் திருமதி மனோன்மணி வன்னியசிங்கத்தின் அண்ணாவும் ஏகாம்பரநாதன், தில்லைநாதன், மலைமகள், திருமகள் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19-09-99 லண்டனில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வ. குகவேள்
(மருமகன்)

கட்டுடை,
மானிப்பாய்.

(69192)

## சோமசுந்தரம் பொன்னுத்துரை

(உத்தரவு பெற்ற வியாபாரி, நல்லூர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பொன்னுத்துரை அவர்கள் 17-9-99 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சோமசுந்தரம் — தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் திருமதி இராசம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீரங்கநாதன் (பெரியதம்பி, உத்தரவு பெற்ற வியாபாரி, கல்வியங்காடு), குலேந்திரன், காந்திமதி, யோகநாதன் (எரிபொருள் நிரப்பு நிலையம், கல்வியங்காடு), பாலேந்திரன் (U K), கேதீஸ்வரன் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற மீனாட்சி (செல்லம்), பொன்னம்மா, காலஞ்சென்ற ஐயாத்துரை (சுகந்தி மில் உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இராசையா (வைத்தியர்), பண்டிதர் இராசையா (ஆஸ்திரேலியா), தங்கம்மா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஜெகநாதன் (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி), கமலாதேவி, இராஜலட்சுமி, சிவசக்தி (U K) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீவாகீசன், ஸ்ரீபரன், செந்தூரன், திவ்யா, சுகேந்திரன், ஷனாதன் பிரியங்கா (U K) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-9-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் (59, அரசவீதி, நல்லூர்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி செம்பாட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
P. ஸ்ரீரங்கநாதன்
P. யோகநாதன்
(மக்கள்)

59, அரச வீதி,
நல்லூர்.

(69188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய்ப்பிரதேசத்தில் 3 நுண்கருத் திட்டங்கள்

வலி. கிழக்கு. செப், 19

அகதிகளுக்கான ஐ. நா. நுண் கருத்திட்டத்தின் கீழ் கோப்பாய்ப்பிரதேச செயலர் பிரிவில் பல லட்சம் ரூபா செலவில் மூன்று வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட உள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

அச்சுவேலி சுற்றயல் கூறு மருத்துவ மனையில் வெளி நோயாளர் பிரிவுக்கென புதிய கட்டடம் அமைக்கவும் வேறு கட்டடங்களைப் புனரமைப் புச் செய்யவும் —

ஊரெழுவில் கிராமிய நிலையம் ஒன்றை அமைக்கவும் —

வாதரவத்தை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடம் அமைக்கவுமே —

நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று திட்டங்கள் தொடர்பான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-180)

# நான்கு ஆண்டுகளின் பின்னர் விஞ்ஞான சங்கச் செய்தி இதழ்

யாழ்ப்பாணம், செப்,19

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 'செய்தி இதழ், நான்கு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் மீண்டும் வெளியிடப்பட்டிருக்கிறது.

அந்த இதழின் வெளியீட்டு விழா கடந்த திங்களன்று பௌதிக விரிவுரை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

விழாவில் நூலின் முதற் பிரதியை பேராசிரியர் திருமதி ஆர். மகேஸ்வரன் துணைவேந்தரிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

விழாவில் வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியன், யாழ். விஞ்ஞான சங்கம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் அதன் மூலம் நிதி உதவி கிடைத்தால் சங்கத்தை மேலும் வளர்க்கலாம் என்றும் கூறினார்.

இவ் வைபவத்தில் பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் அவர்கள் 'தொடர்பாடல்' என்ற கருத்தில் சிற்றுரை நிகழ்த்தினார்.

இறுதியில் நன்றியுரை வழங்கிய யாழ். விஞ்ஞான சங்கச் செய்தி இதழின் பிரதம ஆசிரியர் கலாநிதி என். சிவயோகன் விரைவில் செய்தி இதழையும் யாழ். விஞ்ஞான சங்கம் பற்றிய விவரங்களையும் இன்ரநெற் (Internet) மூலம் உலகில் உள்ள அனைவரும் அறியலாம் என்று கூறினார். (ஐ)

# வன்னியால் வந்தோருக்கு உதவிப் பொருள்

வலி. கிழக்கு, செப். 19

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் வன்னியில்இருந்து வந்து அண்மையில் மீள்குடியமர்ந்த குழந்தைகள் உள்ள 50 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் அல்லாத பொருள்களை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்க உள்ளது.

ரீசேட், துணிவகைகள், பாத்திரங்கள் என்பனவே இவ்வாரம் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-180)

# கைதடியில் மருத்துவ பரிசோதனை

தென்மராட்சி, செப். 19

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடிப் பகுதியில் உள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை இன்று ஞாயிறு காலை 9.00 மணிக்கு கைதடி குருசாமி வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

கண், இரத்த அழுக்கம், சலரோகம், தொழு, வாய்ப் புற்று ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவிருப்பதாக கழகச் செயலாளர் லயன் வி. வி. மகாலிங்கம் தெரிவித்தார். (ஐ-117)

# சுய தொழில் கடன்

பளைப் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் உதவியுடன் முல்லையடி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த25பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் வீதம் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கவுள்ளனர்.

இக் கடனுக்கான கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு பளை பிரதேச செயலக மண்டபத்தில் வழங்கப்படுமென பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

சுழற்கி முறையிலான சுயதொழில் முயற்சிக் கடன் ஏற்கனவே புலோப்பளை, தம்பகாமம் கிராம அலுவலர் பிரிவுகளில் 75 பயனாளிகளுக்கு அந்தந்தப் பிரிவு கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாகவழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

# விரிவுரையாளர் நியமனம்

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பொருளியல், வர்த்தகம், முகாமைத்துவம், கணிதமும் புள்ளி விவரவியலும், தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், சட்டம் ஆகிய பாடங்களுக்கு விரிவுரையாளர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் —

நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்திலேயே இடம் பெறும் என்றும் — உயர் தொழில்நுட்ப நிறுவன பயிற்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## இடம் பெயர்ந்துள்ள

# யாழ். முஸ்லிம் பிரதிநிதிகள் நகரத் தளபதியுடன் பேச்சு

யாழ். குடாநாட்டில்இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதில் உள்ளபிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண முஸ்லிம் அமைப்பின் தூதுக்குழு ஒன்று யாழ். நகரத்தளபதி கேணல் ஜெயதிலகவுடன் பேச்சு நடத்தியுள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் ஜனாப் எஸ். ஏ. சி. முபீன் தலைமையில் சென்ற இந்தக்குழுவினர், தாம் இடம் பெயர முன்னர் கைவிட்டுச் சென்ற கடைகளில் ஏழு கடைகளை மீளப்பெறுவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக அவரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தக் கடைகளை மீளப் பெறுவதில் உள்ள சிக்கல்களை நீக்க நடவடிக்கை எடுப்பதாக தளபதி உறுதி கூறியுள்ளார்.

யாழ். முஸ்லிம் மக்கள்மீளக் குடியமர்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தம்மால் முடிந்த உதவிகளை வழங்குவதாகவும் அவர் குழுவினரிடம் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்கள் முன்னர் வாழ்ந்த வீடுகளின் கதவுகள், யன்னல்கள் இனந்தெரியாதவர்களால் இரவு நேரங்களில் திருடப்படுகின்றன என்றும்—

அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் —

தூதுக்குழுவினர் நகரத்தளபதியிடம் கோரிக்கை விடுத்தனர். (ஐ-3)



# தேவை

சமையல் உதவியாளர்கள் (பெண்கள்)
வயதெல்லை (20—30)
தோட்ட வேலையாள் (ஆண்கள்)
வயதெல்லை (30—50)

உடனடியாகத் தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நற்சான்றிதழ்களுடன் காலை 10.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்குமிடையில் நேரில் வரவும்.

**யோ. எகட்டன்**
ஜெசித்தாரா,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி. (சி/8970)


# ஓராண்டு நினைவஞ்சலி



| குமாரசாமி ரகுநாதன் | | ரகுநாதன் சித்திரா |
|---|---|---|
| 18-02-1957 | ◀ தோற்றம் ▶ | 18-06-1960 |
| 29-09-1998 | ◀ மறைவு ▶ | 29-09-1998 |

திதி: 19-09-1999

ஆண்டு ஒன்று சென்றது
நீவிர் விண்ணில் பறந்து.
ஈருடல் ஒருயிராய்
விண்ணுலகம் அடைந்த
எம் இனிய முத்துக்களே!
ஆறாது எம் உள்ளம்
வெந்து துடிக்கின்றோம்.

ம. சுமதினி
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு.

சகோதரி, மைத்துனர்,
மருமக்கள்,

[ 69171 ]


# வாழ்த்துகின்றோம்

எமது இனிய நண்பரும், சமூக சேவையாளருமான
**Dr. க. வேலும்மயிலும்**
அவர்கள்
15 - 09 - 1999 இல் யாழ். மாவட்ட
() சமாதான நீதிவானாகச் ()
சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சமூகத்தில் மிளிர்ந்து நீடூழிவாழ மனமார வாழ்த்துகின்றோம்.

மா. அனந்தராசன் [ இ மி ச. ]
மு. வன்னியசிங்கம் [ ஆசிரியர் ]
செ. பரராசசிங்கம் [ ஆசிரியர் ]

வடமராட்சி.

[ 69181 ]

# வாழ்த்துகின்றோம்

புதிய நிர்வாகத்தின் கீழ்
9 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்
யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கத்தை
அதன் அங்கத்தவர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும்
மேன்மேலும் சிறப்புறச் சேவையாற்றி வளர
வாழ்த்துகின்றோம்.

யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்.

வடமராட்சிக் கிளை,
நெல்லியடி.

[சி/8994]

## கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!

# ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்துவரும் ஒரே ஸ்தாபனம்

**ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்

கொழும்பில் தங்குவதற்கு ஏற்ற மிகச் சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச் சாலையுடன் அமைந்த ஒரே இடம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

**HOTEL SEIVAMS [GUEST HOUSE]**

No. 29A, SANGAMITHA MAWATHA,
KOTAHENA, COLOMBO – 13.

T·P. No. 356522

(69180)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவதிலே அகன்றது ஆண்டு ஒன்று



### திருமதி ஐயாத்துரை இளையாச்சி
(மணி அக்கா)

(காங்கேசன் தையிட்டி/ சிறாம்பியடி, யாழ்ப்பாணம்)

மலர்வு: 05 – 03 – 1929 உதிர்வு: 30 – 09 – 1998

திதி: 19 – 09 – 1999

முன்னம் ஒரு நாள் பெற்ற அன்னை (மடியில்)
தவழ்ந்தோம்; வளர்ந்தோம்
தன்னந்தனியே அந்தத் தாயைப் பிரிந்து
நடந்தோம்; கிடந்தோம்;
வாழ்ந்தோம்; அது ஒரு காலம்
அந்த நாள்கள் இனி வாராதோ?

எம் குல விளக்கே!
உங்களுக்காய் ஏங்குகையிலே— அழுகையிலே
நினைப்பிலே — துயரிலே — நிதம் வாடி நிற்கும்

மக்கள், மருமக்கள்,
பேரமக்கள்.

தகவல்:-
ஐ. அருளானந்தம் (மகன்),
49/4A, யாழ். வீதி,
சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.

(69144)

## தேவை

அண்ண மகேஸ்வரர் ஆலயத்திற்கு
**குருக்கள்**
தேவை.

தொடர்பு:
ஆலய பரிபாலனசபை
மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

(69168)

## வயலின்

வகுப்பு ஆரம்பம்
**19-09-99**
ஞாயிறு 10.00 மணி
**தூரிகை**
ம. ம. வி. வீதி,
நெல்லியடி.

(சி/8986)

## புதிய பிரிவு

(திங்கள், புதன், வெள்ளி)
**ENGLISH**
**SPOKEN AND GRAMMAR**
By: BRITTO
ஆரம்பம்: **20-9-99**
(திங்கள், புதன், வெள்ளி)
நேரம்: காலை 10 மணி
இடம்: கொக்குவில் (ஞான பண்டிதர்க்கருகில்)

[சி/8954]

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் 8 ஆம் ஆண்டு நிறைவு விழா
## வாழ்த்துக்கள்


எட்டாவது ஆண்டை முடித்து ஒன்பதில் கால் பதித்து
கொண்டாடும் பேக்கரி உரிமையாளர் சங்கம்
எந்நாளும் பார்புகழ ஏற்றமுடன் வாழ்கவென்று
நன்னாளாம் இந்நாளில் நலமுடன் வாழ்த்துகிறோம்.

கோப்பாய் / நல்லூர் கிளை
சகோதர அங்கத்தவர்கள்

(சி/8966)

## நீங்காத நினைவில் ஓராண்டு

பிறப்பு 04 – 06 – 1942



இறப்பு 29 – 09 – 1998

### அமரர் சீனியர் சின்னத்தம்பி

திதி: 19–09–1999

ஆண்டொன்று ஆனதையா
ஆனால் உன் அன்பு முகம் மறையவில்லை.
நூறாண்டு சென்றாலும் நூராதே உன் நினைவு
மாறாத் துயரால் நாம் வாடுகின்றோம் எந்நாளும்
மீளாத்துயில் கொண்டு விண்ணுலகு சென்றுவிட்டீர்
எங்கள் துயர் துடைக்க எப்போ நீர் வருவீரோ?

அன்னாரின் நினைவாக இன்று (19—09—99) ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
–குடும்பத்தினர்

ஜனசக்தி வீதி.
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

(69150)


## கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் நன்மதிப்பைப் பெற்றது

## காவடி மார்க் கற்பூரம்

நின்று நிலைக்கும் ஜோதிமயம்
காவடி கற்பூரம் என்றும் தரும்




கற்பூரம் என்று கேட்காதீர்கள்
"காவடி" என்று கேட்டு வாங்குங்கள்

ஏகவிநியோகத்தர்கள்
**பிரபா டிரேடிங் கம்பனி**
31, கபோஸ் லேன், கொழும்பு
தொலைபேசி: 329426, 422750

சி/8772]


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணுலக சஞ்சாரம் 02 – 06 – 1930

விண்ணுலக சஞ்சாரம் 25 – 08 – 1999

### Dr. கந்தசாமி பாலகிருஷ்ணன்
[R.M.O, M.D.H, (India), D.Fc.(Cey.), M. Ac. F, M.F.(Hom)]

வட மண்ணிலே பூத்து, மலை மண்ணிலே செழித்து நாடெங்கிலும் மானிட உயிர்காக்க தன்னுடல் வருத்திய, எமக்கெல்லாம் வழிகாட்டியாய் நின்ற எமது குடும்ப விடிவெள்ளியின் இறுதி யாத்திரையில் நேரில் கலந்து கொண்டும் தொலைபேசி, தந்தி, தபால் மூலமும் அனுதாபங்களையும், ஆறுதல்களையும் கூறிய அனைவருக்கும் உதவிக்கரம் நீட்டியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 24-09-99 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கின்ற கிரியைகளிலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

இல. 89/3, வைத்தியா வீதி,
தெகிவளை.
T.P. 727710

(69071)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புத்தெழுச்சி பிறக்கட்டும்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினர் நீண்ட கால இடைவெளிக்கும், தொய்வு நிலைக்கும் பின்னர் இன்றைய தினம் நல்லூரில் தமிழ் விழா எடுக்கின்றனர்.

மேற்படி சங்கம் இப் பிரதேசத்தில் தமிழ் வளர்த்த— வளர்க்கும்— சங்கங்களில் மிகவும் மூத்த அமைப்பு. இச்சங்கம் 1923 இல் நிறுவப்பட்டது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு மொழி அறிவூட்டும் சிறந்த கல்வி நிறுவனமாக ஒரு காலத்தில் ஓங்கி வளர்ந்துமிளிர்ந்தது

தமிழை மரபு வழியாகவும், ஆழ்ந்த புலமையுடனும் மாணவருக்குப் புகட்டும் ஒரு நிறுவனம் என்ற புகழோடு துலங்கியது. எங்கள் மொழிமற்றும் சமயப் பாரம்பரியங்களையும் சிறப்பையும் பேணி அவற்றைப் பயிலவும் அவற்றில் பாண்டித்தியம் பெறவும் பல சந்ததிகளுக்குப் பேருதவி செய்த சங்கம் இது.

இந்த நிறுவனத்தில் பயின்ற பண்டிதர்கள் தமக்கு அடுத்தடுத்த சந்ததியினர் தமிழில் புலமை பெறவும், அதனைப் பரப்பவும் பெரும் பங்களித்தார்கள். பண்டிதர்களிடம் பயின்ற பரம்பரைகளுக்குப் பின்னர் வந்த இன்றையமாணவர்கள், தமிழில் போதிய தேர்ச்சி இல்லாதவர்களாகி தமிழின் இலக்கண, இலக்கிய வளங்களைத் தெரிந்து கொள்ள முடியாத துரதிர்ஷ்டசாலிகள் ஆகிவிட்டனர்!

இன்றைய மாணவர்கள் தாய்மொழிமூலம் பயின்றபோதிலும் தமிழை சுத்தமாக எழுதத் தெரியாத பரிதாப நிலையைக் காண்கின்றோம். மிகவும் கவலைக்குரிய நிலை.

பண்டிதர் பயிற்சி பெற்றவர்கள் தொழில் வாய்ப்பில் புறக்கணிக்கப்பட்டமையும் அவர்களுக்கு கைநிறையச் சம்பளம் வழங்கப்படாமையுமே தமிழில் அறிவும் தேர்ச்சியும் குன்றிய இன்றைய நிலைக்கு ஒரு காரணம்.

முன்னொரு காலத்தில் இப்போது பல்கலைக்கழகமாக மாறியுள்ள பரமேஸ்வராக் கல்லூரியில், பண்டிதர் பயிற்சிப் பாடசாலையில் கல்விபயின்றவர்களுக்கு ஆசிரிய நியமனத்தில் சிறப்பிடம் தரப்பட்டது. 1970 களின் முற்பகுதியில் பண்டிதர்களுக்கு ஆசிரியர் நியமனம் கொடுக்கப்பட்டது.

ஆனால் அடுத்து வந்த சில வருடங்களில் ஆசிரியர் நியமனத்தில் பண்டிதர்களுக்கு உரிய பங்குதரப்படவில்லை. பட்டதாரி சம்பளக் கோரிக்கையும் கவனத்தில் கொள்ளப்படவில்லை சுமார் மூன்று தசாப்தங்களாகியும் அந்தக் கோரிக்கை இன்னமும் வேண்டுகோளாகவே உள்ளது!

அதனால் தமிழ் அறிவு வளம் சேர்க்கும், தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களில் பரிச்சயம் தரும், தமிழ்ப் புலமை நல்கும் பண்டிதர் பயிற்சி பெற பல சந்ததிகளைச் சேர்ந்த இளைஞர்கள் பின்னடித்தார்கள்.

எனினும் தமிழை வளர்க்கும் உயரிய நோக்குடனும் அர்ப்பணிப்புடனும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கம் போன்றன தமிழ் ஆர்வலர்களுக்கு இப்பயிற்சியை வழங்கி வருகின்றன.

தமிழ்ப் பண்டிதர் பரம்பரை இப்போது விரைவாக அருகி வருகிறது. இந்த மண்ணில் தமிழ் வாழவும் வளரவும் புதிய சந்ததிப் பண்டிதர்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். அரசு மட்டுமன்றி எமது சமூக அமைப்புகளும் இந்தத் துறைக்குப் புத்துணர்வும் புத்தெழுச்சியும் ஊட்ட உழைக்கவேண்டும். நவீனத்துவத்தினால் எங்கள் மொழியும் மரபுகளும் புலமைகளும் அள்ளுண்டு போகாமல் காப்பாற்றப் புதிதாகக் காலடி பதிப்போமாக!

## உங்களின் உதவியை நாடுகிறார் இந்தத் தாய்



சாவகச்சேரி, மீசாலை, வங்களா வீதியைச் சேர்ந்த திருமதி சுபாஜினி நகுலேந்திரன் இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

ஒரு குழந்தைக்குத்தாயான இவர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சை பெற்ற போதிலும், இந்தியா சென்றுசிகிச்சைபெறுமாறுபரிந்துரை செய்யப்பட்டது. அதன் பிரகாரம் சென்னை மெடிக்கல் மிஷன் வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை வழங்கப்பட்ட போதிலும் இருதய மாற்றுச் சிகிச்சை செய்வதே ஒரே வழி என்று வைத்திய நிபுணர்கள் அறிவுறுத்தி உள்ளனர். அதற்கான செலவு இலங்கை நாணயத்தில் எட்டு லட்சம் ரூபா ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நோயாளியின் குடும்பப் பொருளாதார நிலைமை அந்தப் பணத்தைச் செலவிடுவதற்கு உகந்ததாக இல்லை. அவரது உயிரைக் காக்கும் பொருட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் உதவி நிதி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

ஓர் இளம் தாயின் உயிரைக் காப்பாற்றுவதற்கு உதவுமாறு கருணை உள்ளம் கொண்ட அன்பர்களையும், பரோபகாரிகளையும் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கேட்டுள்ளது.

இந்த உதவி நிதிக்கு பணம் அன்பளிக்க விரும்பும் வள்ளல்கள் இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள 16524 கணக்கு இலக்கத்துக்கு தமது பணத்தை இடலாம்.

ஒரு தாயின் உயிரைக் காப்பாற்றுவதன் மூலம் அவரின் குழந்தைக்கும் வாழ்வு அளித்தவர் ஆவீர்கள். (அ)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நாளை முதல் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். மாவட்டத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமை புரிவோர் முக்கியமான இரு கோரிக்கைகளை முன்வைத்து நாளை திங்கள் முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டும்கூட சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காததை அடுத்தே தொடர்ந்து போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய இரு கோரிக்கைகள் வருமாறு:

★ எமது நிரந்தர நியமனக் கோரிக்கைக்குச் சாதகமான ஒரு பதிலைச் சம்பந்தப்பட்டவர்கள் வழங்கும்வரை கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் எந்த ஒரு கருத்தரங்கிலும் பங்குபற்றுவதில்லை.

★ அரசாங்க சேவையில் உள்வாங்கப்படும் வயதெல்லைக்கு மேற்பட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை அவர்களுக்கு வழங்கப்படும் வேதனத்திற்குரிய இரண்டு மணித்தியாலங்களுடன் பாடசாலை விட்டுச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். [ஐ.ரி]

## பண்ணையாளருக்கு பயிற்சி வகுப்பு

வலி. கிழக்கு, செப். 19

'சர்வதேச கெயர்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வலி. கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்து நடத்தும் பண்ணையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று ஞாயிறு காலை 8 மணி தொடக்கம் மாலை வரை உரும்பிராய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் விரிவுரையாளர்களாக 'சர்வதேச கெயர்' பிரதிநிதிகளான டாக்டர் பொ. இராமநாதன், டாக்டர் ஆர். ஞானசேகர், டாக்டர் எஸ். வசீகரன் மற்றும் என். சத்தியவாகீஸ்வரன், திருமதி ஜெ. கோடீஸ்வரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-180]

## நூல் வெளியீடு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தியின் 'திருநெறிய பண்ணிசை மஞ்சரி' நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் காசி. விநாயகர் தேவஸ்தானத்தில்இடம்பெறவுள்ளது

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் பலர் இவ் விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-ரி)

# மின்மாற்றிகளை தகர்க்காதீர் என வவுனியா மக்கள் கோரிக்கை

## புலிகள் இயக்கத் தலைவருக்கு கடிதம்

வவுனியா, செப். 19

வவுனியாவில் மின் மாற்றிகளைத் தகர்க்கும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி ஏழ்மையில் வாழும் விவசாயிகளின் அன்றாடவாழ்க்கைக்கு உதவுமாறு அப்பகுதி மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வவுனியா கிளையினர் மூலம் அனுப்பப்பட்ட அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம் அது மாத்திரமல்ல யாழ்ப்பாணத்திலிருந்தும், வன்னியில் இருந்தும் இடம்பெயர்ந்த பல ஆயிரக் கணக்கான குடும்பங்களும் தற்போது வவுனியாவில் தான் வாழ்ந்து வருகின்றன. பெருமளவு மாணவர்களும் இப் பகுதியிலேயே கல்வி கற்று வருகின்றனர்.

இந் நிலையில் தொடர்ச்சியாக மின் மாற்றிகள்தகர்க்கப்பட்டு வருவது பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போலாகி விடுகிறது.

இது வரை குருமண் காடு, பூந்தோட்டம் தொழில் பேட்டை, பெரியாறுகுளம், பண்டாரிக்குளம் போன்ற இடங்களில் மின் மாற்றிகள் தொடர்ச்சியாகத் தகர்க்கப்பட்டன.

இந்நிலையில் பாதுகாப்பற்ற மின்மாற்றிகளை அகற்றுவது என்ற பெயரில் கூழாங்குளம், சாந்தசோலை, தவசிக்குளம், மகா இறம்பைக்குளம், மக்காரம்பளை, சமளங்குளம் ஆகிய இடங்களில் இயங்கிவந்த மின் மாற்றிகளும் இராணுவத்தினரால் அகற்றப்பட்டுள்ளன.

இந்நிலைமையில்எமதுபயிர்ச்செய்கை முற்றாகப் பாதிக்கப்படும்அபாயம்ஏற்பட்டுள்ளது. புதிய நீரிறைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் எவரும் இல்லை என்பதனை தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

பெருமளவினர் தமது சொத்து சுகங்களை இழந்து வவுனியா வந்தால் உயிர் பிழைக்கலாம் என்றநப்பாசையில் இங்கு வந்து சிறு விவசாய முயற்சிகளில் ஈடுபட்டு தமது வயிற்றைக்கழுவிவருகின்றனர் இந்நிலையில் முற்று முழுதாக மின்சாரத்தைத் தடை செய்வது அவர்களுடைய வாழ்க்கையையேகேள்விக்குறியாக்கி விடும் —

மின் மாற்றிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தந்தாலேயே மின்மாற்றிகள் மீண்டும் பொருத்தப்படும் என இராணுவத்தினரும், மின்சாரசபையினரும் கூறி வருகின்றனர்.

எனவே எமது ஏழ்மை, துன்பம், கஷ்டங்களைக் கருத்தில் கொண்டும் எமது அன்றாட ஜீவனோபாயத்தை நினைவில்கொண்டும்இம்மின் மாற்றிகளைத்தகர்க்க வேண்டாமென வவுனியாவில் வாழும் மக்கள் சார்பாக தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம் — எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

# கிராம அலுவலர்களின் செயற்பாடு பரீட்சிப்பு

தென்மராட்சி, செப். 19

நாட்டில்உள்ள சகல கிராம அலுவலர் பணிமனைகளுக்கிடையில் முகாமைத்துவப் போட்டி ஒன்றை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சு நடத்தவுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம்திகதி தொடக்கம் அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வரை கிராம அலுவலர் பணிமனையின் செயற்பாடுகளை பரீட்சித்து முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளுக்கான இடங்களைத் தெரிவுசெய்து அறிவிக்குமாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது, (ஐ-117)

## நாளை

புரட்டாதி 03
திங்கட்கிழமை
திதி: தசமி
பிற்பகல் 5.02 வரை
நட்சத்திரம்: உத்தராடம் முழுவதும்
சுபநேரம்: 12.02—1.32
ராகுகாலம்: 7.32—9.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அறங்கள் செய்யாதிருப்பதும் அடுத்தவர் கரம் கூப்பி வணங்கும் போது பதிலுக்கு கை கூப்பி வணங்காதிருப்பதும் கொடுமை.
— [illegible]

# கிபிர் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிப்பு

## ஜனாதிபதிக்கு மதகுரு கடிதம்

முல்லைத்தீவு, செப். 19

முல்லைத்தீவைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு மந்துவில் சந்தைமீது கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற கண்மூடித்தனமான விமானத் தாக்குதலைதாம்வன்மையாகக்கண்டிப்பதாகப் புதுக்குடியிருப்பு சென். யோசப் தேவாலய மதகுரு வண. அருளானந்தம் ஜாலிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள 'பக்ஸ்' செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

அன்றைய தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் உட்பட சுமார் 21 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர். 35 பேர் வரையில் கடும் காயத்திற்குள்ளாகியுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் உடனடியாக நட்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அது மட்டுமல்ல இவர்கள் வசித்து வந்த வீடுகள் மற்றும் குடிசைகள் கூட சேதமாக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கும் தாமதமின்றி நட்டஈடு வழங்கப்படவேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் அமைதியும் சமாதானமும் பேணும் வகையிலான உரைகள் இலங்கை தகவல் தொடர்பு ஊடகங்களில் கூடுதலாக ஒலி பரப்பப்படும் இக்கால கட்டத்தில் இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் தனிநாடு கோரும் கோரிக்கைக்கு சார்பான ஒரு திருப்பத்தை ஏற்படுத்துவதாக அமையக் கூடும்.

மேலும் அரச பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையிலான இதுபோன்ற கண்மூடித்தனமான தாக்குதலை நிறுத்துமாறு படையினருக்கு உத்தரவிடுமாறு உயர்தளபதிகளுக்கு பணிப்புரை விடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## அறிமுக விழா

யாழ்ப்பாணம், செப். 19

புலோலியூர் செ. கந்தசாமி எழுதிய 'மெல்லத் தமிழ் இனி...!' என்ற சிறுகதைத் தொகுதிநூல் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறும்.

புலோலி பசுபதீஸ்வரர் ஆலயபர்வதபத்தினிகல்யாண மண்டபத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம் பெறும். மேற்படி விழாவில் இலக்கிய ஆர்வலர்கள், கல்விமான்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-ரி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மழைகாலத்துக்கு முன்னர் நகர்வுகளை மேற்கொள்ளும் கட்டாயம் படையினருக்கு

**வவுனியா வலம்**
-ரா. இளவரசன்-

கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட 'போர்க்கோஷம்V' நடவடிக்கை ஒரேநாளிலேயே மிகப்பெரும் இழப்பைச் சந்தித்திருக்கிறது.

953 பேருக்குமேல் காயமடைந்து 136 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதானது ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு பலத்த இழப்பாகவே இருக்கிறது.

இதுமட்டுமல்ல ஏற்கனவே தற்போது போர்க்கோஷம் i பகுதியில் கடமையில் இருக்கும் படையினர்தான் மிகவும் கஷ்டமான — ஆபத்தான— ஒரு நிலையில் நிலைகொண்டிருப்பவர்கள். இதனால் அவ்வப்போது ஒரு நாள் லீவிலோ அல்லது அலுவலகக் கடமைக்காகவோ வவுனியாவிற்கு வரும் இவர்களில் பலர் அங்கேயுள்ள லொஜ்களுக்குச் சென்று ''மன்னாரில் இருந்து வருகிறோம் குளித்து உடைமாற்ற வேண்டும்'' என்றும் கேட்கிறார்களாம். லொட்ஜ்காரர்கள் அனுமதி அளித்ததும். அங்கேயே குளித்து உடைமாற்றிக்கொண்டு தாம் போட்டுக்கொண்டுவந்த இராணுவச் சீருடையை மடித்து அருகில் உள்ள சலவைக் கடையில் போட்டுவிட்டு — தங்கள் ஊர்களுக்கு பஸ் ஏறி விடுகிறார்களாம். இதனால் தமக்கு ஏதும் பிரச்சினையாகி விடுமோ என்று பயந்து வவுனியாவில் உள்ள லொட்ஜ் காரர்கள் இராணுவ உடையில் யாராவது வந்து குளிக்கவும் — உடைமாற்றவும் இடம் கேட்டால் ஓடி ஒளியும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இப்படியான நிலை இருக்கும்போது தற்போதைய பேரிழப்புக்களானது மேலும் படையினரை பஸ் ஏற வைத்துவிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே இறப்புக்கள் காயமடைதல்கள் என்பவற்றுக்கு மத்தியில் இந்த —தப்பி ஓடும் நடவடிக்கைகளும் படையினருக்குப்பெருமளவில் பின்னடைவாகவே இருக்கிறது. போதாததற்கு மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் கடந்த வியாழனன்று தட்சனாமருதமடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலிலும் 12 பேர் கொல்லப்பட்டு 21 பேர் காயமடைந்திருப்பது படையினரின் மனநிலையை மேலும் பாதிப்படையச் செய்திருக்கின்றது.

புலிகளிடம் ஆள் பலம் இல்லை; ஆயுதபலம் இல்லை; அவர்களை ஒடுக்கிவிட்டோம் இன்னும் கொஞ்சம் மிச்சம் இருக்கிறது அதனையும் விரைவில் ஒரம் கட்டிவிடுவோம் என்று அரச தரப்பு கூறிக்கொண்டிருக்க இன்னொரு புறம் புலிகள் ஒவ்வொரு தாக்குதலிலும் தமது தாற்பரியத்தை வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஏற்கனவே 'போர்க்கோஷம் IV'இல் நவீன டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களால் கிட்டத்தட்ட 6 க்கு மேற்பட்ட டாங்கிகளை சேதப்படுத்தினர் புலிகள் அதனால் அந்தத் தாக்குதல் பின்னடைவாகியது.

இந்தமுறை அதற்கெல்லாம் பதில் தாக்குதல் ஏற்பாடு செய்து விட்டு களத்தில் இறங்க புலிகள் வேறு ரக நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்,

இது தவிர புலிகளிடம் ஆள் பலமும் குறைவு என்ற கூற்றையும் நம்பமுடியாதுள்ளதாக படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இப்போது வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, மலையகம் மட்டுமல்லாது கொழும்பிலும் புலிகள் நன்றாக ஊடுருவி விட்டார்கள் என்று புலனாய்வுத் தகவல்களே உறுதிப்படுத்தியிருக்கும் நிலையில் வன்னியில் களமுனைகளிலும் பெருமளவு புலிகள் அணிவகுத்து நிற்பது அரசுக்கும் சரி படையினருக்கும் சரி ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இது தவிர முன்னைய காலங்களில் புலிகள் ஆயுதங்களை சிக்கனமாகவே பாவித்து வந்தனர். புலிகள் தரப்பு பலத்த ஊடுருவலை மேற்கொண்டு வேவு நடவடிக்கைகளை மேற்கொண்டு —நின்று— நிதானித்தே—ஒரு ஷெல்லை எதிரியின் இலக்கை நோக்கி ஏவும். அதுவும் குறித்த இலக்கை அடையாவிட்டால் ஷெல்லை ஏவியவர் மீதும் வேவு பார்த்தவர் மீதும் கேள்விகளும் விசாரணைகளும் இருக்குமாம். ஆனால் இப்போது நிலைமை அப்படியல்லவாம்.

படையினர் ஒரு ஷெல்லை ஏவினாலே போதும் அந்த இடத்தை நோக்கி மழை போல புலிகளின் ஷெல்கள் வந்து விழுகிறதாம். ஆகவே ஆயுதத் தரப்பிலும் புலிகள் சளைத்தவர்களாக இல்லை என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறது படைத்தரப்பு.

இந்தநிலையில் அடுத்த கட்டம் என்ன என்று தெரியாத நிலையில் கையைப் பிசைந்தபடி நிற்கிறார்கள் படை அதிகாரிகள். ஒருபுறம் புலிகளின் தாக்குதல்; மறுபுறம் அரசின் நெருக்குதல். இவைகளுக்கு மத்தியில் திண்டாடிப்போய் இருக்கிறார்கள். இந்தத்திண்டாட்டத்தினாலும் தோல்விகளாலும் ஏற்பட்ட மன உழைச்சல்தான் கடந்தபுதன் கிழமை புதுக்குடியிருப்பு பகுதியில் குண்டு வீசி 22-க்கு மேற்பட்ட அப்பாவிகளைப் பழிவாங்கியிருக்கிறது.

இதேவேளை புலிகளின் சாணக்கியமான தாக்குதல்களும் அவர்களுக்கு சிக்கலை உண்டுபண்ணியிருக்கிறது.

பல்வேறு பகுதிகளில் உள்ள படையினரை ஒன்று திரட்டி 'போர்க்கோஷம் - V' நடவடிக்கையை ஆரம்பித்த உடனேயே வவுனியாவில் தாக்குதல்களை தீவிரப்படுத்தி விட்டார்கள் புலிகள். ஒரே நாளில் மூன்று மின்மாற்றிகள் தகர்க்கபபட்டன. படையினரின் 24 மணிநேர பாதுகாப்பிலிருந்த மின் மாற்றி ஒன்றும், மின்சார வேலிபோட்டு இனிமேல் புலிகளால் நெருங்க முடியாதென்றுநினைத்திருந்தமின் மாற்றிகள்இரண்டையும்சர்வ சாதாரணமாக தகர்த்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

தேக்கவத்தை என்ற இடத்திலிருந்த காவலரண் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இதனால் படையினருக்குமேலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இருக்கும் இடத்தைப் பாதுகாப்பதா? இல்லாத இடத்தைப் பிடிப்பதா என்று தெரியாத நிலை.

முதலில் தற்போது நிலை கொண்டிருக்கும் இடத்திலிருந்து 8 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள விடத்தல் தீவைப் பிடிக்க வேண்டும். அங்கிருந்து வட புறமாகத் திரும்பி இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம்,வலைப்பாடு நாச்சிக்குடா ஆகிய இடங்களைக் கடந்து பூநகரியை அடைய வேண்டும். அங்கிருந்து சங்குப்பிட்டிக் கரைக்குப் போய் யாழ். குடா நாட்டு இராணுவத்தினருடன் இணைந்து கொள்ள வேண்டும், மழைகாலம் தொடங்க முன்னர் இவைகளெல்லாம் நிகழ வேண்டும். மழை காலம் தொடங்கினால் அது முடிய அடுத்த வருடம் ஆகும். ஆனால் அடுத்த வருடத்தில் சந்திரிகா அரசு தேர்தல்களை எதிர்கொள்ள உள்ளது. எனவே அதற்கு முன்னர் ஒரு தாக்குதலில் ஒரு பட்டாலியனை இழந்து — மாதக்கணக்காகியும் ஒரு அடிகூட முன்னேற முடியாத நிலையில்—இவைகளெல்லாம் நடக்கக்கூடிய காரியமா என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

★

## எதிரொலி..

- இடியன் -

● அரசு – ஐ.தே.க. சந்திப்பு இணக்கமின்றி முடிந்தது.

★ தீர்வுக்காகச் சந்தித்திருந்தால் இணக்கம் ஏற்பட்டிருக்கும்; ''தேர்வு''க்காகச் சந்தித்தால் பிணக்குத் தானே மிஞ்சும்?

● தேநீர் விற்பதற்குப் பதிவுச் சான்றிதழ் பெறப்பட்ட கடையிலே கள் விற்பனை செய்யப்பட்டதாம்.

★ தேநீருக்குப் பதிலாகத் 'தென்னீர்' விற்றிருக்கிறார்கள்!

● சமீபத்திற் கொண்டாடப்பட்ட கல்லோயா பொன்விழா சம்பந்தமாகத் தமிழ் மக்கள் எவ்வித உற்சாகத்தையும் காட்டவில்லை.

★ பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசம் அபகரிக்கப்பட்டதால் தமிழர்களைப் பொறுத்த வரையில் அது ''புன்—விழா''

● தேர்தலுக்குப் பின், ஜெயலலிதாவின் தொல்லை தாங்காமல். சோனியா, இத்தாலிக்கே ஓடிவிடக் கூடும் என்கின்றார் தமிழக முதல்வர்.

★ இப்போதிருந்தே 'தொ(ல்)லை' நோக்குடன் செயற்படும்படி சோனியாவுக்கு ஆலோசனை வழங்குகின்றாரே?

● கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பகுதிகளில் நடமாட வேண்டாம் எனப்பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

★ அதை மீறி நடமாடினால் பின்னர் ஒற்றைக் காலில் 'நட(ன)மாட' வேண்டிய நிலையும் ஏற்படலாம்!

● தான் இந்திராவின் மருமகள் என்கின்றார் சோனியா: தான் இந்தியாவின் மகள் என்கின்றார் சுஷ்மா சுவராஜ்.

★ தாம் 'இந்நாட்டு மன்னர்' எனக் கருதும் இந்திய வாக்காளர்கள் யாருக்காகக் 'கைநாட்டு' வைக்கப் போகின்றார்களோ?

● செம்மணிப் புதைகுழிகளிலிருந்து எலும்புக் கூடுகள் பல மீட்கப்பட்டுள்ளன.

★ 'செம் மண் நீ' என அந்தப் பிரதேசத்தைக் குறிப்பிடலாமோ?

# துன்ப துயரம் மண்டிய மனித 'வாழ்வு இறைவனது இரக்கத்தால் மீட்சிபெறும்

**ஞாயிறு நற்பிரசாதம்**

அருட்.சகோதரர் ச. அருளப்பர்
(புனித வளனார் சபை)

இறைவன் படைத்தபடைப்புக்களில் மனிதன் மேலான படைப்பாகத் திகழ்கின்றான். ஐந்தாவது அறிவுடன் நன்மை தீமையைப்பகுத்தறியும் ஆறாவது அறிவையும் அவனுக்குக் கடவுள் கொடுத்துள்ளார். படைத்தஇறைவனைத்தனது புத்தியால் அறிந்து உள்ளத்தால் அன்பு செய்து வாழ வேண்டியதுஅவனது கடமை.

வேதாகமம் என்னும் பரிசுத்த நூலின் தொடக்கத்திலிருந்து இறுதி வரை இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு விவரிக்கப்படுகின்றது. பாவத்தால் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு முறிக்கப்படுகின்றது. சாவும் துன்பமும் அவனது வாழ்வை சுமையாக்குகின்றது. ஆயினும் இறைவனது பேரிரக்கத்தால் அவனுக்கு மீட்பு கிட்டுகின்றது.

இதன் முதற்படியாக மனித குலத்திலிருந்து ஆபிரகாம் என்பவரைத் தேர்ந்தெடுத்து அவரின் சந்ததியின் ஊடாக மீட்புப் பணியைத் தொடருகின்றார். இவ்வாறு தாம் தேர்ந்து கொண்ட இஸ்ராயேல் மக்களைத் தன் கண்மணி போல் பராமரித்து வழிநடத்துகின்றார் இறைவன். தாம் வழங்க இருக்கும் பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டை நோக்கிஅவர்களைப் பேராற்றலோடு மோயீசன் மூலம் அழைத்துச் செல்கின்றார்.

சீனாய்மலையில் மோயீசன் வழியாகஅவர்களோடு உடன்படிக்கை செய்து, பத்துக்கட்டளைகளைக் கொடுத்து அவற்றைப் பின்பற்றுமாறு பணித்தார்.

காலப் போக்கில் மக்கள் இறைவனை மறந்து கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் வாழ்ந்தனர்,இவர்களின்பாவ வாழ்க்கையிலிருந்து மீண்டும் நல் வழிப்படுத்த பல தலைவர் களையும் இறைவாக்கு உரைப்பவர்களையும் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றார். இவர்கள் மக்களை எச்சரித்து தண்டித்து அவர்களின் பாவ வாழ்வை உணரச் செய்து மனமாற்றம் பெறச் செய்கின்றனர்.

இவ்வாறு எசாயா [illegible] இறைவாக்கினர் யூத[illegible]டம் அனுப்பப்பட்டார். மக்களையும், அவர்கள் தலைவர்களையும் நேர்மையோடும் நீதியோடும் வாழுமாறு அழைப்பு விடுக்கின்றார். ''ஆண்டவரைத் தேடுங்கள். அவரிடம் திரும்பி வாருங்கள். ஏனெனில் அவர்மன்னிப்பதில் தாராள மனத்தினர்'' எனக் கூறி மக்களை மனமாறச் செய்கின்றார்.

இறைவன் எவரையும் புறக்கணிப்பதில்லை, பாரபட்சம் காட்டுவதில்லை. எல்லோரும் அவருக்கு முன் சமமானவர்கள்.

மனிதன் வெளித்தோற்றத்தைப் பார்த்து மதிப்பிடுகின்றான். ஆனால் இறைவன் எமது உள்ளத்தைப் பார்த்து மதிப்பிடுகின்றார். இப் போர்க்கால சூழ்நிலையில் வாழும் எமக்கு இறைவனது பாதுகாப்பும் அவரது பராமரிப்பும் அவசியம் தேவை. இவை எமக்குக் கிடைக்க அவரின் மேல் [illegible] வாழ்வோம்.

## துன்பத்திலிருந்து விடுபட வழி!

ஞானயோகத்தின் லட்சியம் என்ன? முத்தி, விடுதலை. எதிலிருந்து விடுதலை? நமது குறைகளிலிருந்து விடுதலை. வாழ்க்கைத் துன்பங்களிலிருந்து விடுதலை.

நாம் ஏன் துன்பப்படுகின்றோம்? ஏனெனில் நாம் கட்டுண்டிருக்கின்றோம். அந்தக் கட்டு அல்லது தளை எது? அது இயற்கை சம்பந்தப்பட்டது. நம்மைக் கட்டி வைத்திருப்பது யார்? நாம் நாமே.

இந்தப்பிரபஞ்சமே காரண, காரிய விதிகளால் கட்டப்பட்டிருக்கிறது. அக உலகிலும் சரி புற உலகிலும் சரி காரணமில்லாத எந்தப்பொருளோ எந்த உண்மையோ இருக்க முடியாது.

நம்மைக் கட்டியிருக்கின்ற இந்தத் தளையும் உண்மையானது. நாம் கட்டுப்பட்டிருக்கிறோம் என்பதை நிரூபிக்க வேண்டியதில்லை.

– சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் திருவிழாவுக்கு தயாராகும் தென்பகுதி: சிறுபான்மையினர் மீது திடீரென அக்கறை

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் தேர்தல் பிரசாரக் களம் சூடுபிடித்து ஓயும் நிலையில் உள்ளது. சுமார் 60 கோடி இந்தியர்கள் வாக்களிக்கும் இத்தேர்தலில் வெற்றி கொள்ளும் பொருட்டு பல்வேறுபட்ட கட்சிகளும் மக்களைக் கவரும் வகையில் வாக்குறுதிகளை வழங்கியிருந்ததுடன் தமது எதிர்த்தரப்பைக் கடுமையாக சாடவும் செய்தன. மிகப் பெரிய ஜனநாயக நாட்டுக்கு அண்டை நாடாக விளங்கும் இலங்கையும் எதிர்வரும் ஆண்டைத் தேர்தல் ஆண்டாகவே எதிர்கொள்ளவுள்ளது. தற்போதே அதற்கான ஆயத்தங்களை பல்வேறுபட்ட கட்சிகளும் ஆரம்பித்துவிட்டன. ஜேர்மனிக்கு ஜனநாயகம் பற்றிப் பேச விஜயம் மேற்கொண்ட ரணில் அங்கிருந்து உடனடி அறிவித்தலொன்றை தமது சிரேஷ்ட கட்சி உறுப்பினர்களுக்கு விடுத்திருந்தார் அத்தோடு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் தேர்தலை இலக்காக் கொண்டு பல அறிக்கைகளை வெளியிட்ட வண்ணம் உள்ளது.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் தி.மு. ஜயரத்ன பேசுகையில் தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சந்திரிகாவென்றும் அரசியல் தீர்வுப் பொதிக்கு அங்கீகாரம் கோரியே தாம் அத்தேர்தலை எதிர்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார். ஐ.தே. கட்சியினதும் பிரதான வாக்குறுதியானது இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதே ஆகும். இவ்விரு பிரதான கட்சிகளும் ஒரே வாக்குறுதியுடனேயே மேடையேறவுள்ளன வாக்காளர்களின் பாடுதான் பரிதாபம்.

அத்துடன் இடதுசாரிகளின் தீர்வுப்பொதி தொடர்பான போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்தும் நடந்த வண்ணம் உள்ளன. சந்திரிகா அரசின் பங்காளிக் கட்சிகளான சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் கட்சி போன்ற அரசியல் கட்சிகள் இணைந்து கடந்த செவ்வாயன்று தென் மாகாணத்தின் காலியில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தி முடித்துள்ளன. ஆயிரக்கணக்கான கட்சி ஆதரவாளர்களும் சமாதான விரும்பிகளும் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு போரை நிறுத்தக் கோரிக் கோஷமெழுப்பினர். அரசியல் தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்தக் கோரியே கோஷங்கள் எழுப்பப்பட்டன.

'யுத்த களத்தில் ஒலிப்பதோ சாவு மணியின் சத்தம்'

'வெற்றிகொள்ள முடியாத யுத்தம் வெறும் பயனில்லாத யுத்தம்''

என்றெல்லாம் கோஷமெழுப்பிக் காலி நகரை வலம் வந்த ஆளுங்கட்சிப் பங்காளிகள் அடுத்த தேர்தலுக்கு களமாக இப்பிரச்சினையையே முன்வைப்பார்கள் என்பதும் திண்ணம். எவ்வாறாயினும் இடைக்கிடையிலேனும் எழும் இவ்வாறான கோஷங்கள் இப்பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கு அத்திவாரம் அமைக்குமானால் அதுவே அனைவரினதும் எதிர்பார்ப்பும்கூட. அதேவேளை இவ்வார்ப்பாட்டத்தைக் கண்டித்துப் பல சிங்களப் பத்திரிகைகள் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. நாட்டின் சிங்கள வாசகர்களிடையே அதிக செல்வாக்கைக் கொண்ட 'திவயின' அதன் ஆசிரியர் குறிப்பில் பின்வருமாறு எழுதி உள்ளது:

''யுத்தம் வேண்டாமென்று சிலர் குரலெழுப்பும்போது அவர்களைப் புலிகளின் பிரதிநிதிகளாகவே கொள்ள வேண்டியுள்ளது. நாட்டின் ஆட்சிபீடத்திலுள்ள அரசின் பங்காளிக் கட்சிகளே வென்றும் பயனில்லாத யுத்தம் என்று குரலெழுப்புவதனைப் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. பயங்கரவாதத்தை முற்றாக அழிக்காது பொதிகளூடாக நாட்டுக்கு நன்மை அடைய முடியாது'' என்றும் 'திவயின' ஆசிரியர் குறிப்பு எழுதியுள்ளது. 'திவயின' அண்மைக் காலமாக வீரவிதானவின் பிரசாரப் பத்திரிகையாகச் செயற்படுகின்றது என்பதனையும் மறுப்பதற்கில்லை.

இதற்கிடையில், இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இங்கு வந்த நெதர்லாந்து அபிவிருத்தி அமைச்சர் ஈவ்லைன் ஹேர்வ இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை விட பேச்சுவார்த்தை மூலமான அணுகுமுறையே சிறந்ததென்றும் அரசியல் தீர்வு காண அரசியல்வாதிகள் மத்தியில் அதற்கான ஆர்வம் இருத்தல் அவசியமென்றும் தான் இது தொடர்பாக இலங்கை வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியல்வாதிகளிடையே என்றுமே இருந்திராத ஒன்றைப் பற்றியே அவர் பேசியுள்ளார். சர்வதேச பிரமுகரான அவருடைய கருத்துக்கு பின்னரேனும் சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபட்டுவரும் இலங்கை அரசியல்வாதிகள் சிந்திப்பார்கள் என்றுஎண்ண முடியாத நிலையே உள்ளது. அப்பாவி உயிர்கள் எத்தனை மாண்டாலும் பிச்சைக்காரன் காலிலுள்ள வடுவைக் காட்டி பிச்சைகேட்பது போல் மாறி மாறி வரும் ஆளும் அரசியல்வாதிகளும் யுத்தத்தைக் காட்டியே தமது சுயநலத்துக்காகவே செயற்பட்டு வந்துள்ளனர்.

சமாதானம் என்று பேசும்போது எழுகின்ற ஒரு பிரச்சினையே மொழிப்பிரச்சினையாகும். இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தக் கூடிய ஒரு ஊடகமாக மொழி விளங்குகின்றது இலங்கை போன்ற பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டில் அவ்வூடகம் முறையாக செயல்படத் தவறிவிட்டது அந்த வகையில் கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரணவின் யோசனையின் பிரகாரம் இரண்டாயிரம் ஆண்டு முதல் சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழியும் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள மொழியும் முதலாம் ஆண்டிலிருந்து கற்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது காலந்தாழ்த்தியேனும் எடுக்கப்பட்ட நல்லதொரு முடிவாக இதனை நோக்கினாலும் இதனை முறையாக அரசு அமுல்படுத்துமா என்ற சந்தேகம் பொதுமக்களிடையே எழுவது நியாயமே — வெறுமனே தமிழ்ப் பாடசாலைகளில் மட்டும் இதனை அமுல் படுத்தி மேலும் பிரச்சினைகளை உருவாக்க அரசு இடமளிக்கக்கூடாது. ஒன்றுபட்ட நோக்கத்துடன் இரு மொழி மூல பாடசாலைகளிலும் இதனை அமுல்படுத்தும் பட்சத்திலே முழுமையான பெறுபேற்றைப் பெறலாம். இவ்விடயத்தில் இவ்விருமொழிப் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது.

கொழும்பிலிருந்து
**ராகவன்**

இது இவ்வாறிருக்க நாட்டின் சட்டத் துறையில் பொறுப்புமிக்க நியமனமொன்று கடந்தவியாழனன்று வழங்கப்பட்டது இதுவரை காலமும் பிரதம நீதியரசராக கடமை புரிந்து வந்த சில்வா அவர்களின் ஓய்வை அடுத்து வெற்றிடமாகிய அவருடைய இடத்துக்கு முன்னாள் நீதியரசரான சரத் என்.சில்வா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். அத்தோடு பதில் சட்டமா அதிபராக கமலசபேசன் பொறுப்பேற்றுள்ளார், பொதுவாக நீதித்துறையினரிடையே நன்மதிப்பைப்பெறத் தவறிய ஒருவராகவே சரத் என் சில்வா சுட்டிக்காட்டப்பட்டுள்ளார். அவர் மீது இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில்விசாரணையிலுள்ளதாகவும் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் நாட்டின் பிரதம நீதியரசராக நியமனம் பெறுவது உலக வரலாற்றில் இதுவே முதல்முறையென்றும் விவாதிப்பதற்கு நெருங்கியவராக சரத் என் சில்வா இருந்து வந்துள்ளதுடன் அதன் எதிரொலியாகவே இந் நியமனம் வழங்கப்பட்டதாகவும் வாராந்த செய்தித்தாளொன்று தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

எவ்வாறாயினும் மாறி மாறி ஆட்சி பீடமேறும் அரசியல்வாதிகள் தேவைகளுக்கேற்ப பதவி நியமனங்கள் மாறி மாறி சுழன்றாடும். என்றுமே மாறாத பிரச்சினைகளை தமிழர்கள் அனுபவித்து வருகின்றனர். தேர்தல் காலங்களில் சிறுபான்மைக்கு மதிப்பளிக்கும் அரசியல் கட்சிகள் அவர்களின் தேவைகள் பூர்த்தியானவுடன் மறு தேர்தல் வரை அவர்களின் நினைவுக்கு வராத ஒரு வர்க்கமாகவே சிறுபான்மை மக்கள் இருக்கவேண்டிய நிலை. ★

# இந்துக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர் யோகேந்திரா

**நீத்தார் நயப்புரை**

**சி. சக்திகிரீவன்**

எமது காலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற சிவஞானி யோகர் சுவாமிகளாவார். இவர் உலகிற்கு நான்கு மறைகள்போல நான்கு வாக்கியங்களை அருளியுள்ளார். அவை ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம். நாம் அறியோம், முழுதும் உண்மை, இதை அறிவார். அறிவர் யோகர்சுவாமிகளோடு பல பெரியார்கள் தொடர்பு பட்டு வாழ்ந்துள்ளனர். புகழும் பெற்றனர், அருளும் பெற்றனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் தொடர்ந்து பதினொரு ஆண்டுகள் சபாநாயகராக இருந்த சேர் வைத்திலிங்கம் துரைசாமி யோகர் சுவாமிகளின் அன்புக்குப் பாத்திரமானவர். சேர் துரைசாமி வீட்டில் யோகர் தங்கியே விடுவார். இப்படி அவர்களின் தொடர்பு. இத்தகைய புனிதமான குடும்பச் சூழல் அண்மையில் அமரத்துவம் அடைந்த இலங்கை இந்துப் பேரவையின் தலைவரும், உலக விஸ்வ ஹிந்துபரிஷத் தலைவரும், முன்னாள் யாழ்.மாவட்டஅரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசாமி அவர்கள் 1923 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்17ம்திகதி பிறந்தார்.

இந்தக் குழந்தையில் யோகர் சுவாமிக்கு அலாதியான பிரியம். யோகேந்திரா என்ற பெயரைச் சூட்டிய வரும்யோகர்சுவாமிகள்தான்.

யோகேந்திரா யாழ்: மத்திய கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, றோயல் கல்லூரி ஆகியவற்றிற் கல்வி பயின்ற பின் கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டார். பின்னர் அரசாங்கத்தில் பல உயர் பதவிகளை வகித்து இந்நாட்டின் புகழுக்கு பெருமை தேடிக் கொடுத்தார். றோம், மணிலா, இந்தியா போன்ற நாடுகளில் தூதரகப் பொறுப்பாளராக இருந்து இந்நாட்டுக்கு பெரும் புகழ் சேர்த்தவர். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலும் சர்வதேச ஸ்தாபனங்களிலும் வெளிநாட்டு உறவுகளின் பணிப்பாளர் நாயகமாக இருந்துள்ளார். 1956 ஆம் ஆண்டு இலங்கைப் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

யோகேந்திரா அவர்கள் எந்த நாட்டில் என்ன உயர் பதவியில் இருந்தாலும் தனது ஆத்மீக பாரம்பரியத்தையும் குறிப்பாக சிவயோக சுவாமிகளை மறந்தாரில்லை. வெளிநாட்டு சேவையின் பின் இவர் யாழ் மாவட்ட அமைச்சின்செயலாளராக, மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த காலத்திலும் சிவனடியார்களோடும், ஆத்மீக சிந்தை படைத்தவர்களோடும் தனது தொடர்பை வலுப்படுத்திக் கொண்டார்.

இந் நாட்டில் நடைபெறும் போர் காரணமாக இந்து மக்கள் தாக்கப்படுவதையும், இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதையும். மூர்த்தன்னியமாக எதிர்த்த பெருமைமிகு தலைவர் யோகேந்திரா துரைசாமி. இந்துக்களின் உரிமைகளை அரசு பறிக்க முற்பட்ட அனைத்து சந்தர்ப்பத்திலும் யோகேந்திராவின் குரல் ஓங்கி ஒலித்தது.

காலனித்துவ ஆட்சியில் இருந்து வந்த இந்துக்களின் விடுமுறை தினமாக இருந்த சிவராத்திரி தினத்தை 1996 ஆம் ஆண்டில் பொது விடுமுறை தினத்திலிருந்து நீக்கியதை மிகப்பலமாக எதிர்த்ததோடு அன்றைய தினம் மாபெரும் உண்ணாவிரதத்தை நடத்தி இந்துக்களின் எதிர்ப்பை உலகுக்கு அம்பலப்படுத்தினார்.

எந்தச் சூழ்நிலையிலும் தனது மனச்சாட்சிக்கு விரோதமான கருத்தை பெரியார் யோகேந்திரா முன்வைப்பதில்லை. உண்மையின் பக்கத்தில் உண்மையின் சின்னமாக நின்று உண்மை ஆத்மீக வீரத்துடன் வாழ்ந்தவர் ஆவார்.


# தமிழ் விழா

**யாழ்ப்பாணம்**
**ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்**

இடம்: ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம், நல்லூர்
காலம்: 19 – 9 – 1999 ஞாயிறு மு. ப. 8 30 மணி
தலைவர்: கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை
(சங்கத்தலைவரும், கல்விப் பணிப்பாளரும்)
பிரதம விருந்தினர்: சுந்தரம் டிவகலாலா
(செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு, வடக்கு – கிழக்கு மாகாணம், திருகோணமலை)

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

தமிழ்ப் பெரியார்களின் உருவப்படங்களும் சுவடிகளும் தாங்கிய பண்பாட்டுப் பேரணி காலை 8.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி விழா மண்டபத்தை வந்தடையும்.

- ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி பெறுகின்றோம்

**சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள்**
**ஸ்ரீமதி ப. பங்கஜவல்லி அம்மா**

இத் தம்பதிகள் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவைக் கொண்டாடும் இன்று இவர்கள் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவதுடன் இவர்களின் ஆசியினையும் பெற்றுக்கொள்கின்றோம்.

பிரம்மஸ்ரீ வை. வெங்கட கிருஸ்ண சர்மா,
திருமதி வெ. மாலினி.

இளுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி. [69133]



# கண்ணீர் அஞ்சலி

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றும்
**பொன்னுத்துரை யோகநாதன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**சோமசுந்தரம் பொன்னுத்துரை**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.

தம்பிராசா நிரப்பு நிலையம்,
நல்லூர் மார்க்கற் [69186]



# ஒறிஜினல் பற்கள் கட்ட

முகத் தோற்றத்திற்கு ஏற்ற முத்துப்போன்ற பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதந்த பற்களுக்கு நவீன முறையில் கிளிப் போடுவதற்கும் என்றென்றும் நினைவுக்கு வரவேண்டியவர்கள்:

**எரிக்கணேஷ்**

பல்கட்டும் நிலையமும்
மூக்குக் கண்ணாடியகமும்

## பார்மஸி & குறோசறி

ஆதரவாளர்கள் பலரது வேண்டுகோளின் பேரில் **15-9-99** அன்று மேற்படி பால்மா, மருந்து வகைகள் விற்பனை நிலையம் ஒன்றையும் திறந்து வைத்துள்ளோம் என்பதையும் அறியத்தருகின்றோம். தொலைத் தொடர்பு சேவையும் நடைபெறுகிறது.

**எரிக்கணேஷ்**
566, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
T. P. No. 2486 (C/.001)


## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலி. கிழக்கு, செப். 19

கோப்பாய்ப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக் கூட்டமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காலை 10 மணிக்கும், விவசாயக் குழுக் கூட்டம் காலை 11-30 மணிக்கும் நடைபெறும்.

[ஐ-180]


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான

**நேர்முகப் பரீட்சை 1999**

மேற்படி கற்கை நெறிக்கான உடற் தகைமைத் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்ப் பட்டியல் பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது.

உடற்தகைமைத் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சை 20-09-1999 ஆம் திகதி 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பழைய நூலக மண்டபத்தில் நடைபெறும்.

- பதிவாளர்

[சி/8992]



# 9 ஆம் ஆண்டு நினைவலைகள்





அமரர்
**கந்தையா ஜீவரட்ணம்**
(குமார்)
(வ. பி. போ. ச. மினிபஸ் சாரதி)
அன்னையின் மடியில் 17-07-1960

திருமதி
**சுமதி ஜீவரட்ணம்**

ஆண்டவன் அடியில்
28-09-1990
திதி: 19-09-1999

காற்றினிலே நாதமாய் உங்கள் குரல் கேட்குதே!
தேற்றியும் ஆறாமல் தேம்புதே எம்மனம்
தூற்றுவார் செய்கையால் தாங்காத துயர் கொண்டு
கூற்றுவன் உதவியை நாடியே சென்றீரோ?
மாற்றமாய் ஒன்பது ஆண்டுகள் ஓடியே சென்றன.
ஏற்றிய தீபமாய் உங்கள் நினைவுகள் நிலைத்திடும்.

உங்கள் பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மருமக்கள்.

7, சென். மேரிஸ் 2 ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் முகம்

புத்தூர் ஆவரங்காலைச் சேர்ந்த சி. கிருஷ்ணபிள்ளை யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் எஸ்.ஏ ஈ. ஏகநாதன் முன்னிலையில் அண்மையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



இவர் சுமார் நாற்பது வருடகாலமாக நாட்டின் பல பாகங்களிலும் அரச எழுதுநர் சேவையில் கடமையாற்றி, இறுதியாக யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் தொடர்ந்து பதினேழு வருடங்கள் பணியாற்றிச் சமீபத்தில் ஓய்வு பெற்றுள்ளார்.

ஆவரங்கால் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவராகவும் ஆவரங்கால் பர்வதவர்த்தனி அம்மை சமேத ஸ்ரீ நடராச இராமலிங்கப் பெருமான் ஆலயத் திருப்பணிச் சபை நிர்வாக அங்கத்தவராகவும் தற்சமயம் பணிபுரியும் இவர், ஆவரங்கால் கிராமத்திலுள்ள சமூக அமைப்புகளான சர்வோதய சனசமூக நிலையம், விவேகானந்தா சனசமூக நிலையம், விவேகானந்தா இளைஞர் சேவை மன்றம், மகளிர் மன்றம், இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் முதலான பல பொது ஸ்தாபனங்களின் நிறுவுனரும் காப்பாளருமாவார்.

(ஐ-30)

★ ★ ★ ★ ★



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடந்த 18 வருடங்களாக நிதியாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவரான மயில்வாகனம் ஆலாலசுந்தரம் தொழில் நிமித்தமாக அமெரிக்கா சென்றுள்ளார். இங்கிலாந்தில் முகாமைத்துவப் பட்டயக் கணக்காளராக (FCMA) பட்டம் பெற்றபின் இவர் தேசியக் கடதாசிக் கூட்டுத்தாபனத்திலும் இரண்டு வருடங்கள் கடமையாற்றியிருந்தார். 1982 ஆம் ஆண்டு முதல் யாழ். பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த காலத்தில் பொதுநலவாய நாடுகள் பல்கலைக் கழகங்களால் (ACU) கனடிய உதவித் திட்டம் (CIDA), பிரிட்டிஷ் கவுன்சில் ஆகியவற்றின் அனுசரணையுடன் கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட சர்வதேச கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டிருந்தார்.

யாழ். பல்கலைக் கழக நிர்வாக உத்தியோகத்தர் சங்கத் தலைவராகவும் சேவையாற்றியுள்ள இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

★



கோப்பாய் மணிபல்லவம் பழைய வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ். கே. தங்கவடிவேல் கடந்த மாதம் 23 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிவான் ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

அமரர்களான ஆசிரியர்கள் சு. குமாரசுவாமி, கு. செல்லம்மா ஆகியோரின் புதல்வரான இவர் யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் கடமை புரிந்து வருகின்றார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நாவலர் வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் முன்னாள் வானொலிக்கலைஞர். நாடகங்கள், பட்டிமன்றங்கள் போன்றவற்றில் நடுவராக பணியாற்றியுள்ளார்.

சமூக சேவையில் ஈடுபாடு மிக்கவரான இவர் சிறந்த மேடைப் பேச்சாளருமாவார்.

(ஐ-180)

★ ★ ★ ★ ★



மாணிக்கம் தங்கராஜா (தங்கா) கடந்த 02-09-99 அன்று யாழ். நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை, யாழ். பரி. யோவான் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராகிய இவர் கைதடி உபஅஞ்சல் நிலையத்தில் பதில் தபாலதிபராக கடமையாற்றி, பெருந்தெருக்கள் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தராக ஓய்வு பெற்றவர்.

தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையிலும், வீதி பராமரிப்புத் திணைக்களத்திலும், வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரராக பணியாற்றுகின்றார்.

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கைதடி அத்திலம்புலம் கந்தசுவாமி கோயில் பரம்பரை அறங்காவலரும், கைதடி வீரகத்திப்பிள்ளையார் முதலாய கோயில்களின் நிர்வாக உறுப்பினருமாவார்.

பன்னாலையை வசிப்பிடமாகக் கொண்ட தங்கராஜா பல்வேறு பொது ஸ்தாபனங்களுடன் இணைந்து பொது வேலைத்திட்டங்களில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வருகிறார்.

★



வடமராட்சி கிழக்கு நாகர்கோயிலைச் சேர்ந்த ஆறுமும் நவரத்தினசாமி நீதி அமைச்சினால் சமாதானநீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நாகர் கோயில் பகுதி பிறப்பு இறப்புப் பதிவாளராகவும் வடமராட்சி விவாகப் பதிவாளராகவும் கடமையாற்றி வரும் இவர் நாகர் கோயில் மகா வித்தியாலய நிறுவுனர் குடும்பத்தைச் சேர்ந்தவராவார்.

நாகர் கோயில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், அம்பன் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் உறுப்பினராகவும். நாகர் கோயில் வடக்கு முருகையன் ஆலய சபைச்செயலாளராகவும் இவர் பணியாற்றி வருகிறார். இவர் நாகர் கோயில் சின்னத்தம்பி ஆறுமுகம் தம்பதிகளின் புதல்வாரவார்.

[ஐ-173]

## யாழ். மாவட்ட
# பேக்கரி உரிமையாளர் சங்க
## எட்டாவது அகவை நிறைவு
# வாழ்த்து

எழில் பொங்கும் ஏற்றமிகு தாயாகிய யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க எட்டாவது அகவை நிறைவு நாளாகிய இந்நாளில் அன்னையை நீடுழி வாழ்க வென வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ் வெய்தி உள்ளம் பூரித்து நிற்கிறான் மைந்தனாம்

யாழ். கிளை

(சி/8984)

---

## ஞானோதயா
அக்கடமி
(கண்டி வீதி, சாவகச்சேரி)
**Chemistry Paper Class**

திரு. அன்பு

★ A/L 99, 2000
மாணவர்களுக்குரியது
★ அலகு ரீதியான மீட்டல்
★ பயிற்சிப் பரீட்சைகள்.

ஆரம்பம்: 19-9-99
ஞாயிறு 5. 00 p.m.

★ A/L 2001 உரிய கணித, உயிரியல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(69174)

---

# CHUNDIKULI GIRLS' COLLEGE
Jaffna.
# ANNUAL PRIZE GIVING-99

**Saturday 25th September 1999**
at 9-30 a. m. (S, L. T)

★ Chief Guests
Prof. V. KUNANANDAM
M.B.B.S., F.R.C.S, F.R.C.S. (Surgical Neurology) Ph D. Visiting Professor of Surgery, University of Jaffna.
and
Mrs. SELVARANEE KUNANANDAM

★ Chairperson
Mrs. MAHILARUPPIAM RAJASINGAM
Manageress, Chundikuli Girls' College.

Parents, Old Girls & Well wishers are cordially invited.

Principal, Staff and Students.

(C/8987)

---

## அறிமுகப்படுத்துகிறோம் போரோ சொப்ட்

இது பருக்களினால் ஏற்பட்ட காயங்கள், தழும்புகள் என்பவற்றை அகற்றுகிறது. இதன் சிறப்பு ஆன்ட்டி செப்ரிக் தன்மை (ANTISEPTIC FORMULA) முகத்தில் பருக்கள் வரவிடாமல் தடுக்கிறது இதில் அடங்கியுள்ள விசேட மூலிகைகள் முகத்தை வெண்மையாக்கி பொலிவடையச் செய்கிறது.

# போரோ சொப்ட்
**பிசுபிசுப்பற்றது. கற்றாழைச்சாறு கலந்தது.**





யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்.
**ஜெகன் மருந்தகம் 462/B,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல் பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சில்லறை கடைகள்.

(சி/8056)

---

# நெஞ்சகலா ஓராண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 – 06 – 1953 | 28 – 09 – 1998 |

## அமரர் சங்கரப்பிள்ளை தேவராசா

எம் உயிரினுமினிய அப்பா
காலமெல்லாம் உங்கள் நிழலில் வாழக்
கனவு கண்டிருந்தோம்!
காலனவன் நம் கனவைக் கானல் நீர்
ஆக்கிவிட்டான்!
லயன் எயர் விழும்போது என்னதான்
நினைத்தீர்களோ அப்பா!
நீங்கள் எங்களை விட்டுச் சென்று
ஓராண்டு ஆகிவிட்டதப்பா
இப்புவியில் நாமிருக்கும் வரை
உங்கள் அன்பு முகம் எம்
நெஞ்சை என்றும் விட்டகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்
அன்பு மனைவி,
ஆருயிர்ச் செல்வங்கள்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

(69161)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை
## பழைய மாணவர் தொடர்பகம் (Alumni Office)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பழைய மாணவர் தொடர்பகம் ஆரம்பிக்கப்பட்டு துணைவேந்தர் அலுவலகத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது. பழைய மாணவர்களினதும், பட்டதாரிகளினதும் (முதற் பட்டம்: MBBS, BAD, B. Com, BA, RAFA Diploma or Degree/ உயர்பட்டங்கள்: MA, M.Sc, M.Phil, Ph.D) பெற்றோரினதும் நலன்களை மேம்படுத்தவும் பல்கலைக்கழக வளர்ச்சியில் அவர்கள் பங்குகொள்ளவும் இத்தொடர்பகம் உதவும்.

கடந்த 25 வருடங்களாக இப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றவர்கள், பட்டங்கள் பெற்றவர்களில் இதுவரை பழைய மாணவர் தரவுப் படிவத்தினைப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்காதவர்கள் இப்படிவத்தினைப் பழைய மாணவர் தொடர்பக அலுவலகத்தில் பெற்று பூர்த்திசெய்து விரைவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள வெள்ளிவிழா தொடர்பான தகவல்களை அறியத்தருவதற்கும் இது உதவியாக இருக்கும்.

தபால்மூலம் இப்படிவத்தினைப் பெற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு அவர்களது முகவரியை (வதிவிட முகவரி/ அலுவலகமுகவரி) அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பழைய மாணவர் தொடர்பகம்
(Alumni Office)
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பேராசிரியர்
**பொ. பாலசுந்தரம் பிள்ளை**
துணைவேந்தர்

(சி/8977)

---

## யாழ். மாவட்ட
## பேக்கரி உரிமையாளர் சங்கம்
# 08 ஆம் ஆண்டு நிறைவுவிழா
# வாழ்த்துக்கள்

09 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மேற்படி சங்கத்திற்கும் அதன் புதிய நிர்வாகத்திற்கும் எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்தும் இதே போன்று சிறப்பாக முன்னோக்கிச் செல்வதற்கும் எமது நல்வாழ்த்துக்களை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சகோதர அங்கத்தவர்கள்.
உடுவில் தெல்லிப்பழைக்கிளை.

(சி/8965)

---

# பதவி வெற்றிடங்கள்

## யாழ்ப்பாணத்தில் உடனடியாக நியமனம் வழங்கப்படும்

புனர்நிர்மாணம். நீர்க்காப்பு. சாரம் கட்டுதல், மீள் கட்டுமானம்

ஆகிய துறைகளைக் கையாளும் நன்மதிப்புள்ள நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் நல்ல அனுபவம் உடையவர்களிடமிருந்து பின்வரும் துறைகளுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

சிவில் பட்டம் அல்லது அந்தத் துறைசார்ந்த முன்னறிவுடன்
**திட்ட முகாமையாளர் - திட்டப்பொறியியலாளர் - சிவில் மேற்பார்வையாளர்கள்**

இயந்திரவியல் அது சார்ந்த முன்னறிவுடன்
**பொறியியலாளர்**
(NDT - இயந்திரவியல்)

கொம்ப்ரசர்கள் பராமரிப்புக்கும் இயந்திர நிர்மாணத்துக்கும்
**பொறியியலாளர்**
(NDT - இயந்திரவியல்)

சாரம் கட்டுவதற்கு
**இயந்திரவியலாளர்கள் - பயிற்றப்பட்ட கொம்ப்ரசர் இயக்குநர்கள்**

கற்படை உடைத்தல், வெடி வைத்துத் தகர்த்தல் வேலைகளுக்கு திறமையுள்ள வேலையாளர்கள்
வர்த்தகத்துறை முன்னறிவுடன்
**வர்த்தகமுகாமையாளர். எழுதுநர்கள்**
(கணக்குகள், களஞ்சியம், ஆளணி)

**1999 செப்ரெம்பர் 25 ஆம் திகதி**
**109, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.**
என்ற விலாசத்துக்கு நேர்முகப்பரீட்சைக்கு வரவும்.

## விளம்பரதாரர்
## தபால் பெட்டி இல. 1932,
## கொழும்பு.

29 - 8 - 99 இல் உதயன் பத்திரிகையில் வெளியான இலக்கம் 934, 935 விளம்பரங்களுக்கு விண்ணப்பித்தவர்களும் நேரில் வரவும்.

★ தவிர்க்கமுடியாத காரணத்தினால் நேர்முகப் பரீட்சைகள் 1999 செப்ரெம்பர் 25 ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அறியத் தருகின்றோம்.

(சி/8931)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org